

# மீட்சி

இதழ்: 12
டிசம்பர்
1996




**WAR IS OUR GAME** (SRI LANKAN ARMY)

# பயங்கரவாதம் அல்லது வன்முறையாட்சி



பயங்கரவாதம் அல்லது வன்முறையாட்சி என்பனவற்றிற்கு வரைவிலக்கணம் கூறுவது இலகுவல்ல. இவைபற்றிப் பலர் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்; எழுத்தாளர் மத்தியிலும் வேறுபாடுகள் உண்டு. இச்சொற்களைக்கொண்டு எளிய முறையில் பலவகைப்பட்ட வன்முறைகளை விளக்குவதற்கு முயற்சிப்பதன் விளைவே, இவ்வேறுபாடுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமெனக் கருதப்படுகின்றது. பயங்கரவாதத்திற்கோ அல்லது வன்முறையாட்சிக்கோ எது சரியான சொற்பொருள் விளக்கம், இது யாரால் கொடுக்கப்பட்டது என்பதை இங்கு ஆராய்வதை விடுத்து, பயங்கரவாதம் அல்லது வன்முறை யாட்சி என்பது என்னவென்று அறிவதை நோக்கமாகக் கொள்வோம். இதனைச் சரியாகப் புரிந்துகொள்வதற்குப் பின்வரும் சொற்பொருள் விளக்கம் உதவியாகவிருக்கும்:

## பயங்கரவாதம் / வன்முறையாட்சி:

**அரசியல் நோக்குகளை அடைவதற்காகப் பயன்படுத்தப்படும் 'பயமுறுத்தல்' எனும் 'ஆயுதம்'.**

1974ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி பர்மிங்ஹம் நகர மத்தியிலுள்ள 'மல்பரிபுஷ் டவேர்ண் ஓப் த டவுண்' எனப் பெயர்கொண்ட இரு மதுவிடுதிகள் நிரம்பி வழிந்தவண்ணமிருந்தன. எட்டு மணி கடந்து சில விநாடிகளில் நகரமே அதிரும்படியான குண்டொன்று வெடித்து இரு மதுவிடுதிகளையும் தகர்த்தெறிந்தது. இந்தக் குண்டு வெடிப்பில் 21 பேர் உயிரிழந்தனர். நூற்று அறுபதிற்கு மேலானோர் காயமுற்றனர். இது IRAயின் செயல் எனத் தீர்மானிக்கப்பட்டது.

1968ஆம் ஆண்டு மார்ச் மாதம் லெப்டினன்ட் வில்லியம் கலே தலைமை தாங்கிய அமெரிக்க இராணுவ அணியொன்று, வியட்நாமிலுள்ள 'மை லாய்' என்ற கிராமத்தில் புகுந்து அங்குள்ள கிராம மக்கள் அனைவரையும் கொன்று குவித்தது. இந்தப் படுகொலையை மேலும் ஆராயுமிடத்து, வில்லியம் கலே என்பவருக்கு அமெரிக்க உயர் அதிகாரிகள் விடுத்த கட்டளையானது மை லாய் கிராமத்தைச் 'சுத்தப்படுத்து' என்பதாகும். இதற்கு என்ன காரணம் எனப் பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படு கொலைச் சம்பவத்தில் 500க்கும் மேலான அப்பாவி மக்கள் உயிரிழந்தனர்.

1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி மொன்றியல், கனடாவிலிருந்து புறப்பட்ட Air India Boeing 747 விமானம் அயர்லாந்திலிருந்து கடற்கரையை அணுகும் போது வெடித்து சிதறியதில் 329 பிரயாணிகள் உட்பட விமானமோட்டிகளும் உயிரிழந்தனர். இது காளிஸ்தான் விடுதலை இயக்கத்து அங்கத்தவர்களான சீக்கியரின் செயலெனக் கூறப்பட்டது.

இதேபோல 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி 11.30 மணியளவில் ஆறு நபர்கள் துப்பாக்கிகளுடன் லண்டனிலுள்ள பாரசீக நாட்டுத் தூதராலயத்தினுள் புகுந்து அங்குள்ளோரை பிணைக் கைதிகளாக்கினர். பாரசீக நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 91 கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர். இச்சம்பவத்தை பிரித்தானிய உட்பட பல தேசங்களில் மக்கள் தொலைக்காட்சி மூலம் காணக்கூடியதாகவிருந்தது. ஐந்து நாட்கள் முடிந்ததும் கோரிக்கை நிறைபெறாததையடுத்து பிணைக்கைதி ஒருவர் கொல்லப்பட்டு அவரது உடல் தூதராலயத்திற்கு வெளியே தூக்கியெறியப்பட்டது. இதனையடுத்து சில நிமிடங்களுக்குள் SAS எனக் கூறப்படும் பிரித்தானிய அதிரடிப் படையினரின் அணியொன்று தூதராலயத்தினுட் புகுந்து ஆயுதபாணிகளைக் கொன்று பிணைக்கைதிகளை விடுவித்தனர்.

அண்மையில், அமெரிக்காவிலுள்ள ஓக்லகோமா என்னும் நகரில், அமெரிக்க நாடு என்றுமே கண்டிராத வகையிலான குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்ததை நாம் அறிவோம். இதில் குழந்தைகள் உட்பட நூற்றுக்

கணக்கானோர் அகால மரணத்தைத் தழுவிக் கொண்டனர். இச்சம்பவத்தைப்போல அமெரிக்க அரசுக்கு எதிரான குண்டு வெடிப்பு, கடந்த வருடத்தில் இஸ்லாமிய ஜிகாட் என்ற அமைப்பினால் நடாத்தப்பட்டது என்று குற்றம் சாட்டப்படும், பேருட்டில் இருக்கும் அமெரிக்க தூதராலயக் குண்டு வெடிப்பாகும். அடுத்து 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி யூத மக்களுக்கு எதிராக பொனஸ்ஸரியில் (Buenos Aves) உள்ள ஒரு சமூக பொது உறவு நிலையத்தின்மீது நடாத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவமாகும்.



இப்படியான சம்பவங்கள் பல நாடுகளில் தொடர்ந்தும் நடந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. இதற்கான உதாரணங்களாகப் பின்வரும் சிலவற்றைக் கூறலாம்.

1) 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி, தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு முன்னால் அறப்போரில் ஈடுபட்டிருந்தோர்மீது நடாத்தப்பட்ட தாக்குதல்.

2) 1961ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணக் கச்சேரி முன்பு அறப்போரில் ஈடுபட்டிருந்தோருக்கெதிரான குண்டு வெடிப்பு.

3) 1986ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி எயர் லங்கா Tri Star விமானக் குண்டு வெடிப்பு.

4) 1986ஆம் ஆண்டு மே மாதத்தில் 7ஆம் திகதி நடந்த கொழும்பு தந்தித் தொடர்பு அலுவலகக் குண்டு வெடிப்பு.

5) 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் திகதி இலங்கைத் தொழிலாளர் பேரவை அலுவகத்தில் நடந்த குண்டு வெடிப்பு.

6) 1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி தமிழர் பேரவை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பு.

7) 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி யாழ்தேவிப் புகையிரதக் குண்டு வெடிப்பு.

8) 1985ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அநுராதபுர பௌத்த விகாரையில் நடைபெற்ற தாக்குதல்.

9) 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள சத்துருக்கொண்டான், கொக்காவில், பன்னியச்சாடை பிள்ளையாரடி,கல்முனை போன்ற குடியிருப்புகளில் நடந்த கோரப் படுகொலைகள்.

10) 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காரைதீவு, மண்டைதீவுப் பகுதிகளில் கடைகள் சூறையாடப்பட்டும் மக்கள் பரவலாகக் கொல்லப்பட்ட சம்பவம்.

11) 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள கொக்கட்டிச்சோலை இனப் படுகொலை.

12) 1989ஆம் ஆண்டிலும் 1990 ஆம் ஆண்டிலும் தென்னிலங்கையில் JVPயினருக்கெதிராகப் பரவலாக நடாத்தப்பட்ட கோரப் படுகொலைகள்.

13) 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி அக்கரைப்பற்று முஸ்லிம் சமூகத்தினர் மேலான தாக்குதல்.

14) 1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் காத்தான்குடி முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்.

15) 1992ஆம் ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி மயிலந்தனையில் நடந்த இனப்படுகொலை.

16) 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி அநுராதபுரத் திறகண்மையில் நடந்த பஸ்வண்டிக் குண்டு வெடிப்புச் சம்பவம்.

17) 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி சூரியகாந்தா மலையடிவாரத்திலமைந்துள்ள(இரத்தினபுரி மாவட்டம்) கோலோன் என்னும் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிணக்குழிகள். இவை டிசம்பர் 1989 ஆம் ஆண்டு காணாமல்போன எம்பிலிப்பிட்டியாவைச் சேர்ந்த 31 பாடசாலை மாணவர்களென நிருபிக்கப்பட்டுள்ளது.

18) 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள குமாபுரத்திற்கு அண்மைக் கிராமமான கிளிவெட்டியில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இனப் படுகொலை;

19) 1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி மன்னார் மாவட்டத்திலுள்ள நெச்சிக்குடாக் கிராமத் தின்மீது நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலில் ஏற்பட்ட உயிர்ச் சேதம்.

20) 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் லுனு-ஓயா என்னும் சிங்களக் கிராமத்தின் மீது விடுதலைப் புலி இயக்க அங்கத்தினரால் நடாத்தப்பட்ட தாக்குதல்.

21) நாளாந்தம் தமிழ்ப் பிரதேசங்களில் இரவு பகலாக நடைபெறும் விமானத் தாக்குதல்கள், செல் வெடித் தாக்குதல், குண்டு வெடிப்புச் சம்பவங்கள், மிரட்டல்கள், வெள்ளைவான் கடத்தல்கள், சுற்றி வளைப்புக்கள், சாப்பாடு மருந்துவகைகளைச் செல்லவிடாது தடுத்து வைத்தல், மக்களை மனித கேடயமாகப் பாவித்தல்.

அநேகமாக ஒரு கொடிய அரசினை வீழ்த்த முயலும் புரட்சியாளர்கள், பகிரங்கமான எதிர்க் கிளர்ச்சியில் ஈடுபடுவது இயல்பு. புரட்சியாளர்களுக்கு எதிராகப் போராடும் அரசு பயங்கரவாதத்தினைக் கட்ட விழ்த்து விடுவதென்பது காணக்கூடியது. இதனை எதிர்த்து புரட்

சியாளர்கள் அரசு சார்ந்த முக்கிய அலுவலகங்கள், பாதுகாப்புப் படையினர், செய்தித் தொடர்பு தாபனங்கள்மீது நடாத்துவது ஒரு வரலாறு கண்ட நிலைப்பாடாகும். இத்தாக்குதல்களை அரசு சமாளிக்குமாயின், இவை மாற்றமடைந்து ஒரு கெரில்லாப் போர் பரிமாணமெடுப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. மாசேதுங் சீனாவிலும், பிடல் கஸ்ரோ பஸ்டிடா அரசினைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியதும் கெரில்லாப் போர் மூலமே. இது போலவே, அமெரிக்காவுக்கெதிராக வியட்நாமியர் நடாத்திய போராட்டம், 1980ஆம் ஆண்டில் ஆப்கான் குலமரபுக் குழுவினர் எல்லைமீறி நுழைந்த ரஷ்ய இராணுவ எதிர்ப்பு என்பனவற்றையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இன்று இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கையாளப்படும் போர்முறை வளர்ச்சியடைந்த ஒரு வலிமைபெற்ற கெரில்லாப் போர் முறை எனக் கணிக்கப்படுகிறது. இப் போர்முறையில் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில் பொதுமக்களைத் தம் பக்கம் வென்றெடுத்து அவர்கள் அனுசரணையுடனும், உதவியுடனும் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை காக்க மக்களின் நலன் கருதி, மக்கள் கட்டுப்பாடுள்ள, மக்கள் தம்மை அங்கீகரிக்கக்கூடிய நிலையினை ஏற்படுத்திப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதேயாகும். இது ஒரு இலகுவான செயலல்ல. இருப்பினும் புரட்சிகர போராட்டம் மக்கள்மீது ஏற்படுத்தும் பாதிப்பினை குறைத்து முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்கூறிய அம்சங்கள் முக்கியமானவை என்பது பலர் கருத்து. இன்றைய காலகட்டத்தில் கெரில்லாப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பல புரட்சியாளர்களும், குழுக்களும் உலக நாடுகளினால் நியாயமெனக் கணிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள போர்மரபு ஒழுங்கு விதிமுறைகளை ஏற்று, அவற்றினைத் தாமும் அவதானித்து நடைமுறைப்படுத்த முயல்வதைக் காணக்கூ-



டியதாகவுள்ளது. உதாரணமாகப் போர்க்கைதிகளை நடாத்தும் முறை, காயமுற்ற அல்லது இறந்துபோன எதிரி தமது கட்டுப்பாட்டில் இருக்கும்பொழுது நடந்துகொள்ளும் முறை, தாக்குதல்களை அரசு படைக்கெதிராக மாத்திரமே நடத்துவது, பொதுமக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்குவதையோ அல்லது கொலை செய்வதையோ தவிர்த்துக்கொள்வது என்று சிலவற்றைக் கூறலாம். இப்படியான வழிவகைகளையும், நியாயமென ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம், போராட்டம் நியாயப்படுத்தப்பட்டு அதற்கு ஆதரவும் உலக மக்கள் மத்தியில் வளர வாய்ப்புண்டு. இல்லையேல் நல்ல நோக்குடைய புரட்சி இயக்கங்களும்கூட 'பயங்கரவாதிகள்' எனப் பெயர் சூட்டப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன.

பொதுவாகப் புரட்சி இயக்கங்களால் பொதுவிடங்களில், அதாவது சாதாரண மக்கள் பாதிக்கப்படும் விதத்தில் நடாத்தப்படும் குண்டு வெடிப்பு வழிமுறை, ஆட்களைக் கடத்தித் தமது கோரிக்கைகளை நிறை வேற்றத் தவறினால் கொலை செய்யப் போவதாக மிரட்டுதல், கொலை செய்தல், பரவலாக நடாத்தப்படும் படுகொலை முயற்சிகள், முக்கியமாக பிறநாடுகளில் புகுந்து நடாத்தப்படும் படுகொலை முயற்சிகள் போன்றவை உலக சமூக மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டு 'பயங்கரவாதம்' என்று வர்ணிக்கப்பட்டு, இவற்றில் ஈடுபட்டுள்ளோரைப் 'பயங்கர வாதிகள்' என்று அழைக்கப்படுவது வழக்கம். ஏனெனில் மேற்கூறப்பட்ட வன்செயல்கள் வகைதொகையற்ற முறையில் ஒரு சமூகத்தைத் தாக்கக்கூடிய, சமூகத்திடையே பீதியை ஏற்படுத்தக்கூடிய வன்செயலாக அமைவதே காரணமாகும். அதேசமயம், கெரில்லாப் போராட்டத்தையும், பயங்கரவாதத்தையும் பிரித்துப் பார்த்து உணர்ந்துகொள்வது இலகுவான ஒரு செயலல்ல. இதனாலேதான் வன்முறையாட்சிக்கு ஒரு பொருள் விளக்கம் கூறுவது கடினமாகிவிடுகின்றது. இவ்விரண்டையும் பிரித்துப் பார்ப்பதற்கு வழியாகப் பயன்படுத்தப்படும் ஒருவிதம்-புரட்சிவாதிகள் அல்லது புரட்சி இயக்கங்கள் தம் இலக்கினையடைய வன்முறையை எப்படிப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை ஆராய்வது என்று கூறப்படுகின்றது. இதனையே ஒரு அலகாக பல நாடுகளும், மனிதவுரிமை தாபனங்களும், மனிதவுரிமைகளைப் பேணுவதில் ஈடுபடுவோரும் ஏற்றுக்கொள்வதை அறியக்கூடியதாகவுள்ளது. போராட்டத்தை அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவும், அரசபடையினருக்கெதிராகவும் பிரத்தியேகமாக போர் நோக்குகளுக்கு எதிராகவும் தொடுக்கப்படும் போர்முறை வழிவகைகளில் ஈடுபடுவோரைக் கெரில்லாக்கள் என்றும், வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அதனை பரவலாகப் பாவித்து மக்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்த முயல்வோரைப் 'பயங்கரவாதிகள்' என்னும் முடிவுக்கு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.


பரவலாக்கப்பட்ட வன்முறையை விட இன்னொரு விதத்திலும் 'பயங்கரவாதத்தை'ப் பலர் நோக்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது முன்னர் கூறியபடி பயங்கரவாதச் செயல்களுக்கு எவரும் பலியாகலாம். (பரவலாக நடாத்தப்படும் செய்கையின் தாக்கம்) அதேவேளை, ஒரு சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் தாக்கப்படுவதும் உண்டு. இத்தகைய செய்கையில் ஈடுபடுவோரும் 'பயங்கரவாதிகள்' என்றே கணிக்கப்படுகின்றனர். உதாரணமாக, அரசியல் வாதிகள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கருத்து வேற்றுமையுள்ளோர், சிறைக்காவல் துறையினர், பொலிசார் போன்றோர் அடங்குவர். முன்னைய காலங்களில் குடியேற்றவாசிகளுக்கெதிரான விடுதலைப் போராட்டங்களில், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், நிறம், மதம் என்ற அடிப்படையில் கூட வன்முறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய வன்செயல்களுக்கு ஒரு பொதுவிடத்தில் குண்டுவைத்து பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என் பதும் பலரின் அபிப்பிராயம். இதில் நாம் முக்கியமாக அவதானிக்க கூடியதாகவுள்ளது என்னவெனில், ஒரு சிலர், அல்லது ஒரு குழுவே எது சரி, எது பிழை, யார் குற்றவாளி என்று முடிவுக்கு வருவதேயாகும். இதன் விளைவுணும் பாரதூரமாகிவிடுகின்றது. முதலாவது, இவ்

வழிமுறை மக்கள் அங்கீகாரத்தைப் புறக்கணிக்கின்றது; எந்த முடிவையும் தம் எண்ணப்படி எடுக்கலாம், தட்டிக் கேட்பதற்கு இடமில்லை என்ற நிலைக்கு வந்துவிடுகின்றது. இதனால், எந்த நேரத்திலும் எவரும் பாதிக்கப் படலாம் என்ற சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுவிடுகின்றது.

இது ஒருபுறமிருக்க, பயங்கரவாதத்தை அரசியல் நோக்குகளை அடைவதற்காகப் எவர் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்வதும் முக்கியம்.

புரட்சிவாத இயக்கங்கள் ஒரு அரசினைக் கவிழ்க்க எப்படி வன்முறைகளைக் கையாளுகின்றனவோ, அதேபோல, அரசுகளும், வன்முறைகளை மக்கள்மீது கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தம் ஆட்சியினை நிலைப் படுத்தி வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இருநாடுகளிற்கிடையிலான போரிலும் பரவலாக அரச படைகள் வன்முறைகளைக் கையாள்வதுண்டு. பொதுமக்களைப் பாதிக்கும் வகையிலான விமானக் குண்டுத் தாக்குதல்கள், செல் வீச்சுக்கள், அரச படையினால் நடாத்தப்படும் பரவலான தாக்குதல்கள், பழிவாங்கும் நடவடிக்கைகள் போன்றனவையும் பயங்கரவாதச் செயல்களே. 'பயங்கரவாதம்' பற்றி ஆராயும்போது கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய இன்னுமொரு முக்கிய வேறுபாட்டு நிலை - போராடுவதன் காரணம் அல்லது அதன் நோக்கு என்பதும் போராடும் வழிமுறைகளும் என்று கூறலாம். இதுவும் 'பயங்கரவாதத்தை'ச் சரியாகக் கணித்துக்கொள்ள உதவக்கூடியது. உதாரணமாக, ஒரு இயக்கம் தம் மக்கள் விடிவுக்காக ஆயுதம் தாங்கிப் போராடுவதை பயங்கரவாதம் எனக் கூறமுடியாது. அவர்களைப் புரட்சிவாதிகள், விடுதலைப் போராட்ட இயக்கம் என்று வர்ணிக்கலாம். ஆனால் அவர்கள் முன்னெடுத்துச் செல்லும் போராட்ட வழிமுறைகளில் வன்முறைகள் பரவலாகப் பாவிக்கப்படின், அப்போராட்டம் எத்தகைய நியாயம் உள்ளதாக இருப்பினும் 'பயங்கரவாதம்' எனவே கணிக்கப்படுகின்றது. இப்படியான நிலையில், சூழலில், அரசுகள் சுலபமாகவே 'பயங்கரவாதிகள்' என்ற பெயர்சூட்டி உலக மக்களை அவர்களுக்கெதிராக மாற்றிவிடுகின்றன. இதனால் விடுதலைப் போராட்டங்கள் பின்தள்ளப்படுகின்றன; வலிமையிழக்கின்றன, மக்களுக்கும் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டு சமூகங்கள் அழிந்துபோகும் நிலை ஏற்படுகின்றது.

அதேவேளை, 'பயங்கரவாதிகள்' யார் என்பதிலும் பயங்கரவாதிகளா இல்லையா என்பதிலும் அரசுகளுக்கும் இயங்களுக்கும் இழுபறி ஏற்படுதல் வழக்கம். 'பயங்கரவாதிகள்' என்ற பெயரை விடுதலை இயக்கங்களுக்குச் சூட்டுவதில் அரசுக்கு அதிக இலாபம் உண்டு. அதேசமயம், நாம் பயங்கரவாதிகளல்ல, நாம் விடுதலை இயக்கங்கள் என்று நிலைநாட்டுவதில் இயக்கங்களும் குழுக்களும் ஈடுபட்டு வருவதையும் எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இதனால் இவர்கள் இருவரிடையிலும் ஏற்படும் இப்போட்டி, பிரச்சாரங்கள் மத்தியில் பயங்கரவாதம் என்பது பரவலாகப் பாவிக்கப்படும் வன்முறை என்ற கோட்பாடு மறைந்து விடுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.



## வன்முறையாட்சி, பயங்கரவாதம் ஆராயப்படவேண்டிய விடையங்களே

கடந்த நூற்றாண்டில் பொதுமக்கள் பலர் உலகளாவி நடைபெற்ற பல வன்செயல்களை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்ந்த அநுபவம் அலட்சியப்படுத்தக் கூடிய தொன்றல்ல. பயங்கரவாத வன்முறையினால் இருபதாம் நூற்றாண்டில் மட்டுமே உயிரிழந்த அப்பாவி மக்கள் எண்ணிக்கை உலக வரலாற்றில் இதுவரை காலம் கண்டிராததாகும். இதைவிட முக்கியமானது என்னவெனில், இம்மனிதப் படுகொலைகள், தவிர்க்க முடியாத வையென நியாயப்படுத்தி அதனை ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவதேயாகும். இதனை நாம் உணர்ந்து உடன் பரிகாரம் தேட முயற்சிக்காவிடில் எதையுமே நியாயப் படுத்தும் தவிர்க்க முடியாத நிலைக்கு மக்கள் உட்பட வேண்டியவர்களாகி விடுவார்கள். அதேவேளை, உலகளாவி நடந்து வரும் பயங்கரவாதச் செயல்கள் குறைந்துள்ளனவா என்பதற்குக் கணிப்புக்கள் இல்லை. நாளாந்தம் பயங்கரவாதச் செயல்கள் தொடர்ந்தும் நடை பெறுவதை தொலைக் காட்சி வானொலிச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளன. விமானக் கடத்தல்கள், தற்கொலைஞர்களின் செயல்கள் (மனிதக் குண்டுகள்) போன்றவற்றை இப்புது வடிவங்களின் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். பயங்கரவாதம் இப்படியான புது வடிவங்களை எடுக்கும் போது, உலகளாவிப் பயங்கரவா தம் பெருகிவருவதாகவும் எண்ணம் உருவாகின்றது. அதே வேளை, பயங்

கரவாதத்தைக் கட்டுப்படுத்தாவிடில் அது உலகநாடுகளிற்கிடையில் நிலைத்திருக்கும் சமாதான உறவுகளைத் துண்டித்துவிடும் என்பதும் பலர் கருத்து. இப்படிப் பல காரணங்களுக்காகப் பயங்கரவாதச் செயல்கள் எப்படி நடைபெறுகின்றன; அதன் விளைவுகள் என்ன; பயங்கரவாதச் செயல்களை யார் முன்னெடுத்துச் செல்கின்றார்கள்; அதன் காரணிகள் என்ன; பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அரசுகளும் அரசுசார்பற்ற இயக்கங்களும், பொது மக்களும் எடுக்கும் முயற்சிகள் என்ன; முயற்சிகள் பயனுள்ளனவா; வேறு என்ன முயற்சிகள் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தப் பயனுள்ளதாக இருக்கும் என்பன பற்றிய ஆராய்ச்சி முக்கியமாகின்றது.

## போர்க்கால அரச பயங்கரவாதம்

வன்முறை கண்மூடித்தனமாகப் பரவலாகச் சாதாரண மக்களைப் பாதிக்கும் வண்ணம் பிரயோகப்படுத்தலைப் 'பயங்கரவாதம்' எனக் கூற முடியுமென மேற்குறிப்பிட்டிருந்தோம். இப்படியான நிலை போரில் ஏற்படும் தவிர்க்க முடியாத ஒரு நிலை என்பதை எந்த விதத்திலும் நியாயப்படுத்தக்கூடியதல்ல, இதனை ஏற்கக்கூடியது என்பது பலர் கருத்து. இந்த முடிவினைப் பல அரசுகள் ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனப்படுத்தியிருப்பதும் உண்மையே. அப்படியானால், அரச பயங்கரவாதம் என்று கூறப்படுவது எவ்வகைப்பட்டிருக்கும் என்பதனை அறிவது ஒரு முக்கிய விடயம்.

போரில் பாரிய அளவில் பொதுமக்களே இழப்புக்கு ஆளாவது எவரும் அறிந்த ஒரு உண்மை. இது ஒருபக்கமிருக்க போரில் ஈடுபட்டிருந்தோர் தம் செயல்கள் பயங்கரவாதச் செயல்கள் அல்ல என்று காட்டிக்கொள்வதற்காகப் பொதுமக்களை இணை பிரிக்க முடியாதபடி செய்துவிடுவது அல்லது காரணம் காட்ட முயற்சிப்பது இயல்பு. அதேவேளை, போர்க் காலங்களில் பொதுமக்களுக்கும் இராணுவப் பிரிவினரிற்கும் உள்ள இடைவெளி குறுகியிருப்பதும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயம். உதாரணமாகப் போர்க்காலங்களில், அரச படைகளும், ஆயுதம் தாங்கிப் போராடும் விடுதலை இயக்கங்களும் பொதுமக்களின் உதவிகளைப் பல விதத்திலும் நாடுவது அவசியமாகிவிடுகிறது. உதாரணமாக, போர்க்காலச் சூழ்நிலையில் பொது மக்கள் பெருமளவில் படைத்துறைக்குக் கட்டாய நிலையில் சேர்க்கப்படுவது, படையினருக்கு உணவு ஆக்கிக்கொடுப்பது, தகவல் சேமித்துக் கொடுப்பது, படையினருக்கு மருந்து வசதிகள் செய்து கொடுப்பது, ஆயுத உற்பத்தியில் உதவி செய்தல், பதுங்கு குழிகள் அமைத்துக் கொடுப்பது, காவலரண்களில் காவலராகப் பணியாற்றுவது, என்பனவற்றைக் கூறலாம். இதனால், பிறிதொரு நாட்டில் அல்லது பிறிதொரு எல்லைக்குள் நுழைந்து போராடுபோது படையினருக்குப் பொதுமக்கள் யார், எதிரி யார் என்று பிரித்துப் பார்ப்பது கடினமாகி விடுகின்றது. இதனால் படையினர் பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவது வழக்கமாகிவிடுகின்றது. இதனை நியாயப்படுத்த படையினரும் அரசும் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபடுவது வழக்கம். உதாரணமாக, எல்லைமீறி நுழையும் படையினர் பயிர்களைக் கொள்ளையடிப்பது; எரித்துச் சேதம் விளைவிப்பது, வியாபாரத் தாபனங்களைச் சூறையாடுவது, எரிப்பது; அப்பாவிப் பொதுமக்களைப் பயமுறுத்துவது, கண்மூடித்தனமாக அடித்துத் துன்புறுத்துவது, சித்திரவதைக்குள்ளாக்குவது; கொலைசெய்வது; தடுத்துவைப்பது, வற்புறுத்தி வேலை வாங்குவது, மனிதக் கவசமாக்குவது ஆகியன போரின் வழமையான செயல்களாகிவிடுவதை நாம் காணுகின்றோம். இச்செயல்கள் யாவும் பயங்கரவாதச் செயல்களேயாகும். போராடுவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் பொதுமக்களை எப்படி வித்தியாசப்படுத்திப் பார்ப்பதென்பதே. உலக நாடுகளிற்கிடையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ள 'ஜெனீவா மரபுவிதிகள்' எனப்படும் போர்விதி முறைகளில் மிக முக்கியமானது, போரினால் பொதுமக்கள் மீது ஏற்படும் விழைவுகள் குறைக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இதனை நிலைநாட்ட, அதாவது பொது மக்களெனப் பிரிவு படுத்திக்காட்ட கூடிய வழிமுறை என்னவெனில் எந்தவொரு மனிதனும் தன் விருப்பால் சேராது, படையினரின் வற்புறுத்தலுக்கு ஆளாகி அவர்களுடன் சேர்ந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பின் அல்லது ஆயுதம் தாங்காது இருப்பின் அவனைச் சாதாரண பொதுமகன் என்றே கணிக்க வேண்டுமென்பதாகும். ஆனால் இது போராட்டங்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது கேள்விக்குரிய விடயம்.

இத்தருணத்தில், இரண்டாம் உலகப் போரில் நடந்த விமானக் குண்டு வீச்சு பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1936-39ஆம் ஆண்டு நடந்த ஸ்பானிய உள்நாட்டுக் கலவரத்தின்போது நடந்த விமானக் குண்டு வீச்சுக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு படிப்பினையாக இருந்ததாகச் சரித்திரவியலாளர்கள் குறிப்பிடுவது வழமை. ஏனெனில், மக்கள் எழுச்சியை அடக்கப் பலம் தரக்கூடிய ஆயுதம் விமானக் குண்டு வீச்சு எனக் கருதப்பட்டதேயாகும். இதன்பின் மூண்ட இரண்டாம் உலகப்போரில் விமானக் குண்டு வீச்சு பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் முக்கியமானது ஜேர்மனிமீது பிரிட்டிஷார் நடாத்திய விமானத் தாக்குதல். தொடக்கத்தில் விமானத் தாக்குதல் துல்லியத் தாக்குதலாக (Precision Bombing) இருக்க வேண்டுமென்றே முடிவு செய்யப்பட்டது. அதன்படி குறிப் பிட்ட ஜேர்மன் தொழிற்சாலைகள் மீதும், படையினர் குடியமைப்பு வரிசைகள் மீதும், ஆயுதக் களஞ்சியங்கள் மீதுமே தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இருபது சதவீதமான குண்டுகளே குறியிலக்குகளுக்கு 5 மைல் வட்டாரத்திற்குள் விழுந்து சேதம் ஏற்படுத்தியது என்பது கணிப்பு. எனவே, இத்தகைய துல்லியத் தாக்குதல்கள் பயனற்றுப் போக, ஜேர்மன் நகரங்களை விமானக் குண்டு வீச்சின் மூலம் தாக்கப்பட வேண்டும், இதனாலேயே நினைத்த காரியம் கைகூடும் என்ற புது முடிவை பிரித்தானியர் எடுத்தனர். பலர், இப்படியான முடிவை எதிர்த்த போதும், லோர்ட் சேர்வேல் (Lord Cherwell) என்னும் பிரித்தானிய அரசுக்கு ஆலோசனை கூறும் விஞ்ஞானியொருவர், ஜேர்மன் நகரங்களைத் தாக்குதல் மூலம் 30% சதவீதமான தொழிலாளர்களை 15 மாதங்களில் அழித்தொழிக்க முடியும், இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு ஜேர்மன் சரணடையும் என்று ஆலோசனை கூறினார். இது ஒரு சிறந்த ஆலோசனையென்று அன்றைய பிரதமராக இருந்த வின்சன்ட் சேர்ச்சிலும், படைப் பிரதிநிதிகளும் வரவேற்றனர். அதன்படியே 1941ஆம் ஆண்டு ஆகாயப்படையினருக்குத் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் ஜேர்மன் நகரங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளக் கட்டளை பிறப்பிக்கப்பட்டு பயங்கர விமானத் தாக்குதல்கள் தொடர்ந்தன. பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் முக்கியமாக நாம் அறியவேண்டியதென் னவெனில், இப்புதிய விமானக் குண்டுத் தாக்கல் கொள்கையினால் ஏற்பட்ட தாக்கம் பொதுமக்கள் படுகொலையைத் தவிர இராணுவ வெற்றியில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை என்ற முடிவுக்குப் பிரித்தானியர் வந்ததாகும். சேர்ச்சில் கூட வரலாற்றுப் புகழ்பெற்ற டிரஸ்டன் (Dresden) என்ற ஜேர்மன் நகரம் மீது நடாத்திய பயங்கரக் குண்டுத் தாக்குதல் ஏற்கத்தகாதது எனக் குறிப்பிட்டுள்ளார். இதில் 10,000க்கும் மேலானோர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒரு கட்டத்தில், ஜேர்மன் நகரங்கள்மீது விமானத் தாக்குதல் அவசியம் என்ற நிலையினை வேறு சாக்குப்

போக்குகள் கூறி நம்பவைப்பதற்குக் காரணம், மக்களை பீதிக்கு உட்படவைத்து சரணடையப்பண்ணுவதன் நோக்கமே என நாம் உரக்கூடியதாகவுள்ளது என்று சேர்ச்சில் கூறியதாகச் சரித்திரம் கூறுகின்றது.

அதேவேளை ஜேர்மன் நகரங்கள் மீது நடைபெற்ற விமானத் தாக்குதல் என்னும் தந்திர உபாயம் போர் வரலாற்றிலேயே ஒரு முக்கிய விவாதத்திற்குரிய அம்சமாக மாறியது. இக்குண்டு வீச்சுக்கள், மக்களிடையே பீதியை ஏற்படுத்தியிருந்தும், அவர்கள் மனத் தைரியத்தை வளர்த்திருப்பதையே காணக்கூடியதாக இருந்ததென்பது ஆராய்ச்சியாளர்கள் கணிப்பு. இதனால், பயங்கரவாதம் என்பது உறுதியான எதிர்ப்பை உருவாக்க வழியமைக்குமே தவிர மக்களை அடிபணியவைக்க முடியாது என்பது வரலாறு கண்ட உண்மை. ஆனால் இதனை இந்த நூற்றாண்டில் கூட அரசுகள் உணரவில்லை என்பது பலர் கருத்து.

இதேபோல, இன்று நாடுகளுக்கிடையே ஆயுத உற்பத்திப் போட்டிகள் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன் அடிப்படைக் காரணம் நாடுகளுக்கிடையே பரவிவரும் 'பயம்', அதாவது தம்மை மற்ற நாடுகள் முற்றாக அழிவினிக்குட்படுத்தி விடுவார்களோ என்ற 'பயம்' என்பது சமாதான விரும்பிகளின் கணிப்பு. இது பயங்கரவாதத்தின் ஒரு உச்சகட்டம் எனக் கூறலாம். அரசுகள் பல்வேறு காரணங்களைக் கூறி வன்செயல்களில் ஈடுபடுவதில் அக்கறை கொண்டுள்ளதாக இருக் கின்றனவேயல்லாது அதனைத் தவிர்த்து வன்செயல்களில் ஈடுபடுவோரைத் தண்டித்து வன்செயல்கள் வளர்ச்சியடைய விடாது தடுப்பதைத் தம் முக்கிய நோக்காகக் கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது. இதன் அடிப்படையே, வன்செயல்களைத் தடுக்குமுகமாக உருவாக்கப்பட்ட அனைத்துலகச் சட்டவாக்கங்கள் உதாசீனப்படுத்தப்பட்டு வளர்ச்சியடையாமலும் பயனற்றதாகவும் இருப்பதற்குக் காரணம் எனக் கூறலாம். இதனால் மிகச் சகஜமாக அரசுகளால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதச் செயல்களான - விசாரணையற்ற கால வரையற்ற தடுப்புக்காவல், குறிப்பாகத் தெளிவற்ற அங்கீகரிக்கப்படாத சட்டங்களின் அடிப்படையில் உருவாகிய சட்டலாக்கங்களை உபயோகித்துக் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைத்தல் (இச்சட்டங்கள் மூலம் எவரும் கைது செய்யப்படலாம். கேட்பதற்கு ஆளுமல்லாத, மறுமொழி சொல்லவும் தேவையில்லாத நிலை); சித்திரவதை; பெண்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறை; கற்பழிப்பு போன்றவை தொடர்ந்தும் காணக்ககூடியதாகவுள்ளது.

## கெரில்லாக்களா அல்லது பயங்கரவாதிகளா

ஒரு அரசுக்கெதிராக போராடும் புரட்சிவாதிகளை, இயக்கங்களை அரசுகள் 'பயங்கரவாதிகள்','பயங்கரவாத இயக்கங்கள்' என்று பெயர் சூட்டுவது வழக்கம். ஆனால், புரட்சிவாதிகளும், இயக்கங்களும் தாம் ஈடுபட்டுவரும் செயல்கள் பயங்கரவாதச் செயல்களா இல்லையா என்று ஆராய்வது, பயங்கரவாதச் செயலெனக் கணிக்கப்படும் செயல்களை தவிர்த்துக் கொள்வது அவசியம். ஒரு கெரில்லா இயக்கம் பல இடைஞ்சல்களுக்கு மத்தியில் செயல்பட வேண்டியிருக்கும். அவர்கட்கு, ஆட்பலம், பணஉதவி, ஆயுதம், மக்கள் துணை, உணவு, உடை, தங்கு வசதிகள், பயிற்சித் தேவைகள் என்று பல தேவைகள் உண்டு. பல இடைஞ்சல்களுக்கு மத்தியில் விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வது ஒரு இலகுவான செயலல்ல. கெரில்லா இயக்கங்கள் எல்லா வலிமையுமுடைய ஒரு கொடிய அரசுக்கு எதிராகப் போராடும்போது பல தந்திரோபாயங்களை உபபோகிக்க வேண்டியிருக்கும். இந்நிலையில், கெரில்லா இயக்கங்களின் சில செய்கைகள் அவர்களுக்குப் 'பயங்கரவாதிகள்' என்ற பெயரைப் பெற்றுத்தர வாய்ப்புக்கள் அதிகம். இதனால் கெரில்லா இயக்கத் தலைவர்களுக்கு அரச அதிகாரிகள், படை அதிகாரிகளைவிட கண்ணியமாகவும், ட'தில் சொல்லக் கடமைப்பட்டவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது. அதிகமான கெரில்லாத் தலைவர்கள் தமது படையினரைப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து பொதுமக்கள் மத்தியில் ஆதரவு திரட்டும் வழிமுறைகளிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது இயல்பு. உலகில் பெயர்பெற்ற தலைவர்களில் ஒருவரான மாசேதுங் கூட பின்வருவனவற்றையே தனது விடுதலைப் போராளிகளுக்குக் கட்டளை விதியாக்கினார்.

அ) பண்பட்ட முறையில் பேசப் பழகுவது.

ஆ) ஒரு பொருளைப் பெறும்போது அதனை நியாயமான விலை கொடுத்துப் பெறுவது.

இ) தற்கால உபயோகத்திற்கெனக் கடனாகப் பெற்றவற்றைக் கவனமாகப் பேணி அவற்றினைத் திருப்பிக் கொடுத்தல்.

ஈ) சேதம் விளைவித்த பொருட்களுக்கு நட்ட ஈடு கொடுத்தல்.

உ) சாதாரண மனிதனை அடிப்பதையோ, பேசுவதையோ தவிர்த்துக் கொள்வது

ஊ) விவசாய விளைச்சல்களை அழிப்பதைத் தவிர்ப்பது.

எ) பெண்கள்மீது உரிமைப் பேறு களைத் தவிர்த்தல்.

ஏ) கைதிகளைக் கொடுமைப்படுத் துவதைத் தவிர்த்தல் போன்றவையாகும்.

இதேபோல, சேகுவேரொ என்ற கெரில்லாத் தலைவர் 'பயங்கரவாதம்' ஒரு பயனற்ற செயல். பரவலாக தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இச் செயல் அதிகமாகச் சாதாரண பொதுமக்களைத் தாக்குவதனாலும், அர்த்தமற்ற உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துவதனாலும், போராட்டத்திற்கு முக்கியமாகத் தேவையான மக்கள் சக்தியை இழக்க வைக்கிறது. இதனால் பயங்கரவாதச் செயல்களால் ஒரு பலனும் இல்லை என்று கூறியுள்ளார்.

பயங்கரவாதச் செயல்களுக்குப் பல காரணங்கள் உண்டு. அநேகமாகப் பயங்கரவாதம், பலவீனத்தன்மையினாலேயே பாவிக்கப்படுவதாகப் பலர் கருத்து. உதாரணமாகத் தமது பிரச்சனைகளுக்கு எவரும் செவிசாய்க்காது இருப்பின், பயங்கரவாதச் செயல்கள் மூலம் கவனத்தை ஈர்க்கலாம் என்பது சிலர் எண்ணம். அதே போல, ஒரு ஆயுதப் போராட்டம் நியாயமானதென்று உலகரங்கில் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படுமாயின் விடுதலை இயக்கங்கள் ஈடுபடும் பயங்கரவாதச் செயல்கள் உலகரங்கில் விமர்சிக்கப்படா என்று எண்ணிச் செயல்படுவர்களும் உண்டு. பாலஸ்தீன இயக்கம் மீது இக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

'பயங்கரவாதம்' கொடூரமானது, அழிவை ஏற்படுத்துவது, அர்த்தமற்றது, பயனற்றது என்பதனைப் போராடுபவர்கள் உணர்ந்தும் பயங்கரவாதச் செயல்கள் குறைந்ததாகச் சான்றுகள் இல்லை. பயங்கரவாதச் செயல்கள் பாரியளவில், விரிவடைந்து விஞ்ஞான ரீதியில் நடைபெற்றுவரும்பொழுது, பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராகச் செயல்படுபவர்கள், பலவீனமடைந்த நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான நிலையில் பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள் என்ன செய்யலாம் என்பது ஒரு முக்கியமான கேள்வி. அதற்குப் பதில் பயங்கரவாதத்தின் விளைவுகளை உணர்ந்தவர்கள், மனப்பூர்வமாக எதிர்ப்பவர்கள் செய்ய முயற்சிக்க வேண்டிய ஓரே வழி, நாடுகள் பெருமளவு ஆயுத உற்பத்தி செய்வதை எதிர்த்தும் போராடுவதும் ஆயுத விற்பனையைத் தடுப்பதற்கு உலக மக்களைத் திரட்டுவதேயாகும். ●

# மன நோய்

மனம் அல்லது உளம் என்பதுள் ஒரு மனிதனின் சிந்தனை, மன உணர்ச்சி, மனமகிழ்வுடன் முனைகின்ற இயல்பு ஆகியனவடங்கும். இவற்றில் அதாவது சிந்திக்கும் ஆற்றல், மன உணர்ச்சி, மனமகிழ்வுடன் செயற்படும் இயல்பு ஆகியவற்றில் ஆற்றல் குறைந்து காணப்படுவதை 'மன நோய்' என்று விளக்கமளிக்கப்படுகின்றது.

உடல் சார்ந்த நோய்கள் பலவகை இருப்பதைப் போலவே மன நோயிலும் பல வடிவங்கள் உண்டு. மன நோய் காரணமாகப் பலரின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடையே மனநோய் எந்தளவு பரவியுள்ளது என்பதைக் கணக்கிடுவது கடினமான ஒரு விடயம். 'மனநோய்' என்பதற்கு முறையான வரைவிலக்கணம் இல்லாதிருப்பதும் இதற்கு ஒரு காரணம் எனக் கூறலாம். ஆனால் மன நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மட்டுமே மன நோயாளிகள் என்பது ஒரு பிழையான கணிப்பு.

ஒரு மிகச் சிறிய பகுதியினரே மனநோய்க்கு உரிய பராமரிப்புப் பெறுகின்றனர். பெரும்பாலானோர் உதவியற்று மேலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள் என்று சமூகத் தொண்டர்கள் கூறுகின்றார்கள். பொதுவாக மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான தகவல்கள் அரசாங்கத் திணைக்களங்களிலோ அரசு சார்பற்ற தாபனங்களிடத்தோ அல்லது சமூக தாபனங்களிடத்தோ இல்லை என்பதைப் பலர் உணர்ந்துள்ளனர். இதன் காரணமாக அரசாங்க சுகாதாரப் பணிமனைகள் உட்பட, கல்வி நிறுவனங்கள், சமூகத் தாபனங்கள், அகதி அமைப்புக்கள் ஆகியன இது தொடர்பாக ஆய்வுகள் நடாத்தி அறிக்கைகள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது.

'மனநோய்' பிரித்தானிய மக்களிடையே காணப்படும் சாதாரண ஒரு நோய் என்பது மருத்துவர்களின் கருத்து. 1991ஆம் ஆண்டு டாக்டர்களின் மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி ஆறு மில்லியன் பிரித்தானிய மக்கள் 'மனநோயினால்' பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. மேலும் 1991ஆம் ஆண்டில், 18,288 பேர் மனநோயினால் இறந்துள்ளனர் என்றும் அறிக்கைகள் கூறுகின்றன.



## மனச்சோர்வு

மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான அறிகுறியாகவும் இது அமைவதாகக் கூறப்படுகின்றது.

மனச்சோர்வும் ஒரு மிகச் சாதாரண அநுபவமாகும். சலிப்பு, மகிழ்ச்சியற்றிருத்தல், துன்பம் என்பனவும் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் உணர்வுகளாகும். பெரும்பாலும் இவற்றிற்கான காரணிகளாக ஏமாற்றம், இடைஞ்சல், வேண்டியோரின் அல்லது வேண்டிய பொருட்களின் இழப்பு என்பன அமைதலைக் காணலாம். சிலவேளைகளில் இம்மனநிலைக்கான காரணிகளை அறிய முடியாதிருக்கும். மனது சரியில்லை என்ற ஒரு காரணத்தையே கூறக்கூடியதாக இருக்கும்.

மனச்சோர்வுடைய சிலரின் வாழ்க்கை மிகவும் பாதிப்படைந்து இலக்கின்றி நாட்களை அவமே போக்குவதாக விளங்கும். அத்தகையோரை முயற்சியற்றோர் என வர்ணித்தல் எவ்வகையிலும் அவர்க்கு உதவாது. இவ்வாறானவர்க்கு மனச்சோர்வு ஒரு பிணியெனக் கண்டு பரிகாரம் செய்தல் வேண்டும்.

போரினால் உற்றோரையும் உறவினரையும் வீட்டையும் பிரிந்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்ட அனைவரும் தனிப்பட்ட அனுபவம் எப்படியிருந்தபோதும் ஒருவித ஏக்க நிலையைத் தாங்கி நிற்பது இயல்பு. போரின் உடனடி அச்சுறுத்தல்கள் அகன்ற பலகாலத்திற்குப் பின்னும் ஒருவித ஏக்கநிலை தொடர்ந்தும் நிலைத்து நிற்பதை அகதிகளாகப் புலம் பெயர்ந்து வருபவர்களிடம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் தொடரும் போரினாலும் தொடர் துயரினாலும் ஈழத்தமிழர் பலர் நாட்டைவிட்டு நீங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தப்பியோடச் சிலருக்குச் சில பொழுதே கிடைத்தன. ஆபத்தை முன்னுணர்ந்து ஆயத்தங்கள் சில செய்ய முடிந்தவர்களும் உளர். கணப்பொழுதில் தப்பி வந்தோரே பெரிதும் இடர்ப்படுகின்றனர். போரின் மனவடுக்களுக்கு ஈடுகொடுப்பதில் தனிப்பட்ட வேறுபாடுகள் இருப்பினும் மனவடுவின் விளைவான மனோநிலைகளில் ஒரு பொதுவான பாங்கு இருப்பதைக் காணலாம். அகதி அந்தஸ்து கிடைக்கும்வரை ஏற்படும் நெருக்கீடுகளின் உச்சநிலையில் மனச்சோர்வு பலருக்கு ஏற்படுவதுண்டு. நாம் திருப்பியனுப்பப்படலாம் அதனால் தொடர் துயரத்திற்கோ அல்லது கொலைக்கோ ஆளாகலாம் என்ற இடையறாப் பீதி அகதிகளிடம் இக்காலப் பகுதியில் காணப்படுவது இயற்கை.

நாளாந்த மனச்சோர்வுக்குச் சிலசமயம் காரணியற்றிருப்பதுபோல கடுமையான மனச்சோர்வுக்கும் சிலவேளை காரணியிருக்காது. வீட்டு வசதி, பணப்புழக்கம், வேலையற்றிருத்தல், நெருக்கீடு, சீரப்பிணி, மிகையான உழைப்பு, நெருங்கியவரை இழத்தல் என்ற அநுபவங்களால் ஏற்படும் எதிர்விளைவாக கடும் மனச்சோர்வு அமையலாம். அதேபோல் காரணமின்றி சடுதியாக ஏற்படும் கடும் மனச்சோர்வும் உண்டு.

## உதவியை நாடல்

தொடர்ந்திருக்கும் மனச்சோர்வு காரணமாக தொழில், குடும்பத்தவருடனான உறவு பாதிக்கப்பட்டு நாம் மற்றையோரால் வேண்டப்படுவதில்லை என்ற உணர்வு ஏற்படுமாயின் உதவியை நாடவேண்டும்.

உறவினருடனோ அல்லது நண்பருடனோ மனந்திறந்து பேசுவதும், அவருடைய பக்கபலமும் கடும் மனச்சோர்வைக்

குணமாக்க உதவும். ஆனால் கடும் மனச்சோர்வு நன்கு வேரூன்றிய ஒருவர் தமது குடும்ப வைத்தியரிடம் செல்வதே சாலச் சிறந்தது.

படிப்படியாக வளரும் மனச்சோர்வுக்கு எம்மையும் எமது ஊக்கமின்மையை ஏதுவாக்குவதனால் எமது உண்மை நிலையை நாம் அறியாதிருக்கலாம். உதவியை நாடுதல் ஒரு குறைபாடு அல்ல என்பதை வேறொருவர் எடுத்துக் கூறும் நிலையில் நாமிருக்கலாம். அல்லது மனச்சோர்வும் களைப்பும் ஏன் தொடர்கின்றன என்றும் ஆச்சரியப் படலாம். சிலவேளைகளில் மனச்சோர்வானது இனங்காண முடியாதவாறு இடைவிடாத தலைவலி, சரீரவலி, நித்திரையின்மை போன்ற சரீரப்பிணியை வெளிக்கொணரும்.

## அறிகுறிகள்

பின்வரும் சில அறிகுறிகள் மூலம் மருத்துவ உதவி தேவையென்பதை நீங்களோ, உங்கள் குடும்பத்தவரோ அல்லது வைத்தியரோ கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும்.

- வாழ்க்கையில் ஈடுபாடின்மை, விருப்பற்ற நிலை.
- சிறு காரியங்கள், தீர்மானங்கள் என்பவற்றை மேற்கொள்ளலில் இயலாமை அல்லது பெருமுயற்சி தேவைப்படல்.
- மேலோங்கிய களைப்பு
- வெடுவெடுப்பு, நிலையற்றிருத்தல்
- பருமன் கூடுதல் அல்லது குறைதலுடன் இணைந்த பசி அல்லது பசியின்மை
- வெளிப்படையான பாசமின்மை, பாலியல் விருப்பின்மை
- தன்னம்பிக்கையற்றுப் போதல், தனிமை விருப்பு
- வெடுவெடுப்பு
- உதவியற்ற, எதிர்பார்ப்பற்ற, இயலாமை உணர்வு
- பெரும்பாலும் காலையில் மனம் தளர்ந்த நிலை
- தற்கொலை எண்ணங்கள் எழல், கடும் மனச்சோர்வுடையோர்க்கு இந்நிலை பெரிதும் ஏற்படும்.

இதனை மறைக்காமல் வெளிப்படுத்துதல் சிறந்தது. உதவி தேவைப்படுமென்பதை இதனால் நன்குணரலாம்.



## காரணிகள்

கடும் மனச்சோர்வுடையவரும் அவரது உறவினரும் நண்பரும் அதற்கான காரணத்தையறிய ஆவலாயிருப்பர். ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளை அநேகமாகக் காணலாம். ஆளுக்கு ஆள் காரணிகள் வேறுபடும். அவலமேற்படுமிடத்து மனச்சோர்வு ஏற்படல் இயல்பு. அதேபோல் அதிலிருந்து விடுபடலும் இயல்பானதே. சிலவேளைகளில் இதில் தடங்கலேற்பட்டு கடும் மனச்சோர்வு அகலாது நிலைக்கும்.

அவலம் ஏற்பட்ட வேளையில் காணப்பட்ட சூழல் இதற்கு ஏதுவாகலாம். தனிமை, நண்பர் அருகிலில்லாமை, உடல் நலிவு என்ற சூழலில் அவலம் ஏற்படுமாயின் கடும் மனச்சோர்வுக்கு ஒருவரை இட்டுச் செல்லலாம்.

பத்தில் ஒரு பெண்ணுக்கு மகப்பேற்றின்பின் கடும் மனச்சோர்வு ஏற்படுகின்றது. உயிராபத்தான புற்றுநோய், இருதயநோய், பாரிசவாதம் போன்ற பிணிகளும் நீண்டகாலப் பிணிகளுடையோருக்கு கடும் மனச்சோர்வும் தொடரும்.

மனச்சோர்வு ஒருவரது ஆளுமையும் ஏதுவாகலாம். ஆண்களைவிடப் பெண்களிடம் மனச்சோர்வு அதிகமுள்ளது. ஆண்கள் உணர்வுகளை மறைத்து ஆக்கிரமிப்புப் பாங்கு அல்லது மதுவெறி மூலம் அவற்றை கொணர்வது இதற்கு ஒரு காரணமாகும். அதேபோல் குழந்தைகளையும் பராமரித்து தொழிலும் பார்ப்பதால் பெண்களிடையே நெருக்கீட்டுநிலை அதிகமாகின்றது.

கடும் மனச்சோர்வுடைய பத்தில் ஒருவருக்கு இதற்கான காரணம் அதீத உற்சாகமும் அதீத உழைப்புமாகும். இந்நிலை இருபாலாரிடமும் சமமாக இருப்பதுடன் ஒரு குடும்பப்பாணியாகவுமுள்ளது.

## பரிகாரம்

அநேகமான மனச்சோர்வுடையோரை குடும்ப வைத்தியரே பரிகரிக்கலாம். அறிகுறிகளுக்கேற்ப உரையாடல், மாத்திரைகள் என்பன அவர் கையாளும் வழிமுறைகளாகும்.

உரையாடல்: மனந்திறந்து பேசுதல் எவ்வித மனச்சோர்வுக்கும் உதவும். மணமுடித்தவரிடையேயான பிணக்குப்போன்ற நிகழ்வு காரணமான மனச்சோர்வுடையோரிற்கு உதவ 'லோகல் ரிலேட்' (முன்னைய மரிஜ் கயிடன்ஸ் கவுன்சில்) என்ற விசேட அமைப்பு உள்ளது. ஊனம் அல்லது ஒருவரைப் பாராமரிப்பதில் ஏற்படும் மனச் சோர்வுக்கு பரஸ்பரம் உதவுவோர் சுற்றாடலில் தமது உணர்வுகளைப் பகிர்தல் நல்ல பயனை விளைவிக்கும்.

சிலவேளைகளில் ஆழ்ந்த உணர்வுகளை, நெருங்கிய நண்பருடன் பகிர்வதும் முடியாததாகவிருக்கும். இவ்விடத்து மனமருத்துவர் (சைகோதெரபிஸ்ட்-Psychotherapist) ஒருவரே மிகவும் உதவியானவர். மனச்சோர்வினால் சுயமதிப்பீடு தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவருக்கு தன்னையிட்ட ஒரு முகக்கவனிப்பு வழங்கப்படுதல் மிக்க பயனளிக்கும்.

நெருங்கியவரின் இறப்பினால் ஏற்படும் மனச்சோர்விற்கு மனம் விட்டு உரையாடல் நல்ல மருந்தாகும்.

மாத்திரைகள்: தொடர்ந்திருக்கும் மனச்சோர்விற்கு அல்லது கடும் மனச்சோர்விற்கு மாத்திரைகளை வைத்தியர் எடுத்துக் கூறுவார். இவை மயக்க நிலையையோ பழக்க தோஷத்தையோ உண்டு பண்ணா. பெரும்பாலும் ஒரு சில மாதங்கள் பாவித்தல் தேவைப்படலாம். மாத்திரைகள் பெருமாற்றத்தை உடனடியாக ஏற்படுத்தா. முதலிரு வாரங்களில் பொறுமையை இழக்காது மாத்திரை உண்டு வந்தால் முதல் நாளிலிருந்தே சிறு முன்னேற்றத்தை அவதானிக்கலாம். ஏக்கம், தளர்வுற்ற நிலை, தூக்கம் ஆகியவற்றில் இம்மாற்றம் நன்கு தென்படலாம். முன்

னேற்றம் கண்டதும் மாத்திரை உண்ணலை நிறுத்துவதனால் பிணி மீண்டும் தலையெடுக்கும். மாத்திரை தேவை யில்லையென்ற முடிவை வைத்தியரிடம் விடுவது சிறந்தது.

மற்ற மருந்துகளைப்போல இம்மாத்திரைகளிலும் பக்க விளைவுகள் இருக்கும். ஆனால் காலக்கிரமத்தில் இவை அற்றுப்போகும். வாயில் வரட்சியும், மலச்சிக்கலும் ஏற்பட லாம். மாத்திரை பலனளிக்கிறது என்பதன் வெளிப்பாடு களே அவை. மாத்திரைவகையைப் பொறுத்தே பக்கவி ளைவு அமையும். வைத்தியர் இவைபற்றி உங்களிடம் கேட்டு அறிவார். நித்திரை மயக்கம் ஏற்படுமா என்பது பலரது கேள்வியாகும். மாத்திரை இரவில் உட்கொள் ளப்படுவதால் தூக்கத்திற்கு இது உண்மையில் உதவியே. எனினும் பகலில் தூக்கக் கலக்கமிருப்பின் வாகனம் செலுத்துவதோ யந்திரங்களைச் செயற்படுத்தலோ தவிர்க்கப்பட வேண்டும்.

சாதாரண ஆகாரங்களோடும் பெரும்பாலான பொது வாகப் பாவிக்கப்படும் மாத்திரைகளோடும் இம்மாத் திரைகளை உட்கொள்ளலாம். மது அருந்துதல் தவிர்க் கப்படல் வேண்டும்.

## முன்னேற்றமில்லாதவிடத்து

முன்னேற்றம் காணாத சிறுதொகையினர் உளமருத்து வரிடம் செல்ல வேண்டியிருக்கும். முதற் சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடிக் கலாம். உறவினரையோ, நண்பரையோ உடனழைத்துவர வேண்டப்படலாம். மேலோட்டமான கேள்விகளே எழுமாதலால் ஏது நடக்குமோ என்று அஞ்சத் தேவை யில்லை. உங்கள் பின்னணி, நடந்த மருத் துவம் என்பவற்றை அறிவதே உளமருத்து வரின் நோக்கமாயிருக்கும். புது மாத்திரை களோ, அல்லது முனைப்பான உரையாடல் மருத்துவமோ அளிக்கப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்படும். சிலசம யங்களில் மின்கதிர் மருத்துவமும் அளிக்கப்படலாம். மருத்துவமனையில் தங்கவேண்டி வராது. மிகக் கடும் மனச்சோர்வென்றால் பகல் வேளையில் மருத்துவமனையில் இருக்க நேரிடும்.



மின்கதிர்மருத்துவம் சிறந்த பலனை விரைவில் அளித்த போதும் அதனை அறி யாதவரிடத்தில் அச்சத்தை ஏற்படுத்துவதா கக் காணப்படுகின்றது. மாத்திரைகள் பலன ளிக்காத கடும் மனச்சோர்வுடையோரிற்கு தசைகளை தளர்வாக்கி மூளைக்கு ஒரு கணப்பொழுது மின்கதிரைச் செலுத்துவர். ஒரு கண மின்கதிர் செலுத்துவதற்கு நோயா ளியைத் தயார் செய்ய எடுப்பது 15 நிமி டங்களே. இந்த 15 நிமிடங்களும் உறங்கிய உணர்வே நோயாளி அறியும் அநுபவ மாகும். 6 முதல் 12 தடவை மின்கதிர் மருத்துவம் தேவைப்படலாம். கிழமைக்கு 2 முறை என்ற அடிப்படையில் இது அமையும்.

மின்கதிர் மருத்துவம் எவ்வாறு செயல்படுகின்றது என் பதை அறுதியிட்டுக் கூறமுடியாதபோதிலும் அது பயனு டையதே. மனச்சோர்வுடையோரில் பெரும்பான்மையின ருக்கு மின்கதிர் மருத்துவம் தேவைப்படுவதேயில்லை.

## உங்களுக்கு நீங்களே உதவும் வழி

வைத்தியரிடம் மருத்துவம் பெறும்போதுகூட உங்களுக்கு நீங்களே உதவும் வழிகள் உள:

1. உணர்வுகளை அடக்கி, அடைத்து வைக்கவேண்டாம்: கெட்ட செய்தி கிடைத்தாலோ அல்லது வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டாலோ நெருங்கியோரிடம் எடுத்துரைத்து உங்கள் தாக்கத்தை வெளிப்படுத்துங்கள். நன்கு கண்ணீர் சிந்தி, துக்கத்தைப் பேசித் தீர்க்கவும். இது மனத்தின் இயல்பான குணமாக்கும் முறையாகும்.

2. ஏதாவது காரியத்தில் ஈடுபடவும்: வீட்டுக்கு வெளியே உலாவி வரவும். தேகாரோக்கியம் இதனால் முன்னேறி நல்ல தூக்கம் ஏற்படும். தொழில் செய்ய விருப்பிராத வேளையில் மற்றைய சாதாரண வீட்டு வேலைகளில் ஈடுபடவும்.

3. மனநிலை இல்லாவிட்டாலும் போஷாக்குள்ள நல்ல உணவு அருந்தவும். பழ வகைகளும் மரக்கறியும் முக்கிய மானவை. மனச்சோர்வுடையோரிற்கு எடை குறைவதும் ஊட்டச்சத்துக் குறைவதும் பாதகமானவை.

4. துயரத்தை வேறு எதிலும் ஆழ்த்த முனைய வேண் டாம்: மது அருந்துதல் முடிவில் ஆரம்பத்திலிருந்த தையும்விட மேலான மோச மனச்சோர்வையே தருவிக்கும். தகுந்த உதவியை நாடுவதைத் தடுப்பதோ மது அருந்து துவதோ உடல் நிலையையும் பாதிக்கும்.

5. தூங்க முடியாதென்ற எண்ணத்திற்கு இடமளிக்க வேண்டாம். உறங்காவிட்டாலும் ஆறியிருக்கும்போது வானொலி கேட்பதும் தொலைக்காட்சி பார்ப்பதும் உதவி யாயிருக்கும். உங்களையறியாமலேயே தூக்கம் உண்டாகும்.

6. நினைவூட்டவும்: பலருக்கும் ஏற்பட்டு பலரும் மீட்சிபெற்ற மனச்சோர்வே உங்க ளுக்கும் உள்ளதென்பதை மறக்க வேண் டாம். சிலவேளைகளில் மனச்சோர்விலிருந்து மீண்டோர் முன்பிலிருந்ததை விடக்கூடிய தகைமை பெற்றவராகின்றனர். முன்னர் எடுக்கத் துணியாத முடிவுகளை எடுக்கவும் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் கூடிய பக்குவம் உங்களுக்கு இதனால் ஏற்படும்.

## உற்றாரினதும் நண்பரினதும் பங்கு

மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டவர் தமது இழந்த ஆற்றலை மீட்பதற்கு, உறவி னர்களதும் நண்பர்களதும் பங்கு மிக முக்கி யமானது. உற்றாரும் நண்பரும் தாம் எவ் வாறு உதவமுடியுமென அறிய முன்வருவது வழக்கம்.

## உற்றாரும் நண்பரும்

உற்றாரும் நண்பரும் தாம் எவ்வாறு உதவமுடியுமென அறிய முனைவர். மனச் சோர்வுடையவர் கூறுபவற்றை நீங்கள் பொறுமையுடன் கேட்பது மிக முக்கியம்.

அவருடன் காலம் கழித்து, நிர்ப் பந்திக்காது உடற்பயிற்சியில் ஈடுபடுத்தி தனிமையை அவருக்கு ஏற்படாது செய்தல் நன்று. மீட்சி ஏற்படுமென்று, இடையறாது எடுத்துக்கூறி உற்சாகமூட்டலும் அவசியமாகும். சிறந்த உணவளித்து மதுவிலிருந்து விலக்கி வைத்துக் கொள்ளவும்.

மனச்சோர்வுடையோர் வாழ்க்கை வேண்டாமென்றோ அல்லது தன்னைத்தானே வருத்தவேண்டுமென்றோ பேசத் தொடங்கியவுடன் அபாயத்தை உணர்ந்து வைத்தியரிடம் தொடர்பு கொள்ளவும். நோயாளியை வைத்தியரிடம் செல்லத் தூண்டவும்.'நானென்றால் இந்த மாத்திரைகளை எடுக்க மாட்டேன், உளவைத்தியரிடம் செல்ல நீ பைத்தியம் அல்லவே' என்று ஒருநாளும் நோயாளி முன் பேச வேண்டாம்.பரிகாரம் பற்றி ஐயமிருப்பின் நோயாளியி டம் இதுபற்றி பிரஸ்தாபிக்கமுன் வைத்தியருடன் பேசித் தீர்க்கவும். ●

## குர்திஸ் விடுதலைக் கவிதைகள்

# ஆறு கவிகள் — பத்துக் கவிதைகள்

**யமுனா ராஜேந்திரன்**



புவிப்பரப்பெங்கினும் சிதறடிக்கப்பட்டு வாழும் ஒரு இனத்தைச் சேர்ந்த மக்கள் குர்திஸ் மக்கள். தமது சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்படுபவர்கள். கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுபவர்கள். ஈராக், ஈரான், துருக்கி, சிரியா, ஆசியாவின் ஒரு பகுதி என துண்டாடப்பட்ட வாழ்வும் கலாசாரமும் அவர்களுடையது. அவர்களது வாழ்வு நொறுங்கிப்போனது போலவே அவர்களது மொழியும் படைப்புக்களும் கவிகளும் இந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் மிகக் குரூரமான முறையில் கொன்றொழிக்கப்படுகின்றார்கள். அழிவுபற்றிய கண்ணீர் அது அவர்களது ஆன்மாவில் ஏற்படுத்தும் வலி, அதற்கெதிராக ஜீவனுள்ள வாழ்வுக்கான எதிர்ப்புணர்வு போன்றவைகளே அவர்களின் கவிதைகள். உடனடி அனுபவம், மக்களின் பேச்சுமொழி, அரசியல் தொலைநோக்கு போன்றவை அவர்கள் கவிதைகளில் வெளியாகின்றன.

இழந்துவிட்ட தாயகத்தைப் பற்றிய ஆதங்கம், அழிவுற்ற தாயகத்துக்கல்ல, விடுதலைபெற்ற தாயகத்திற்குத் திரும்புவோம் என்ற ஏக்கம், இயற்கை மற்றும் அரசியல் உற்பவங்களில் இருந்து மீண்டும் ஜீவனுடன் வெடிப்புறத் துளிர்க்கும் அவர்களது சங்கல்பம் போன்றவைகளே இன்றைய குர்திஸ் கவிதைகளின் வெளிப்படு பொருள். இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் 10 கவிதைகளுடையதும் 6 கவிகள் சமகாலத்தில் உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் படைப்பாளிகள். பாரம்பரியக் குர்திஸ் கவிதைகளுக்கும் இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும் கவிதைகளுக்கும், இடையே நிலவும் விசேடமான வித்தியாசம்; பாரம்பரியக் கவிதைகள் நிரம்பப் படிமங்களும் லயமும் கற்பனையும் கொண்டவை, உடனடித் தன்மை சாராதவை, மக்களின் அன்றாடப் பேச்சுமொழி அனுபவம் எதிர்ப்புணர்வு போன்றவற்றைக் கொண்டிராதவை. இங்கு இடம் பெறும் கவிதைகள் ஒருவகையில் நவீன கவிதைகள்.

அருவமான படிமங்களை பெரும்பாலும் நிராகரித்தவை: மக்களின் பேச்சுமொழியின் நேரடித்தன்மையை, அனுபவங்களை, உடனடித்தன்மையை வெளியிடுபவை. அனைத்துக்கும் மேலாக லயமும் அரசியலும் மக்களின் அனுபவப் படிமங்களும் ஒன்றிணைந்த கவி வடிவங்கள் இக்கவிதைகள்.

இக்கவிதைகள் Anthology of Contemproary Kurdish Poetry எனும் தொகுப்பிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை. 13 கவிஞர்களுடைய 35 கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 6 கவிஞர்களின் 10 கவிதைகள் இவை. இத்தொகுப்பின் முன்னுரையாளர் சொல்கிறார்: ஆங்கில மொழிபெயர்ப்பில் வாசகனோடு பேசத்தக்கதான தேர்வு அவருக்கு அடிப்படையாக இருந்திருக்கிறது. குர்திஸ் மக்களின் கவிப் பாரம்பரிய லயம், இன்றைய அரசியல் போராட்டத்தின் உடனடி அனுபவம் போன்றவற்றை இக்கவிதைகள் வெளியிட வேண்டியதின் பாற்பட்டுத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பில் குர்திஸ் கவிதைகளின் மூலலயம் என்பது நிச்சயமாகச் சிதறிவிடும் எனக் குறிப்பிடும் ஆங்கில முன்னுரையாளர், அதேவேளை இக்கவிதைகளில் கற்பனையும், உணர்ச்சிகளும் அதிர்வோடும் உள்ளார்ந்தும் இருக்குமாறும் பார்த்துக்கொள்ளப்படுகின்றது என்கிறார். இதே அடிப்படையை ஈழவிடுதலைப் போராட்டத்தின் பின்னணி கொண்டும், தமிழ் மக்களின் உடனடி அநுபவங்களைக் கவனங்கொண்டும் நானும் எனது தேர்வுக்கான அடிப்படையாகவும் கொண்டிருக்கிறேன். ஒரு வகையில் ஒடுக்கப்பட்ட மக்களனைவரதும் துயரமும் எதிர்ப்புணர்வும் எழுப்பும் அனுபவமும் இணையும் புள்ளி இது தான்.

அறிமுகக் குறிப்புகளில் இடதுசாரி நாடகக்காரரும் அரசியல் நடவடிக்கையாளருமான ஹெறால்ட் பின்ரர் சொல்கிறபடி, குர்திஸ் மக்களின் துயரமே இக்கவிதை களைப் பிறப்பித்திருக்கிறது. கொன்றொழிப்பிற்கு எதிராக வலிமையையும் சோகத்தையும் மட்டும் இவை கொண்டி ருக்கவில்லை, வாழ்வதற்கான எதிர்ப்புணர்வையும் இவை கொண்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக இக்கவிதை கள் உடனடி அனுபவத்திலிருந்து எழுந்தவை, இயங்குபவை, நம்மை அசைத்து நிற்பவை. 1994ஆம் ஆண்டு துருக்கி/ ஈராக் எல்லைப் பகுதிகளில் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட 18 வயது இளம் பெண் போராளி ஜேயினுக்கு இத்தமிழ் மொழிபெயர்ப்பினைச் சமர்ப்பிக் கின்றேன்.

நூல் விபரம்:
*Anthology of Contemporary Kurdish Poetry*
*Kurdish Solidarity Committee and Yashar Ismail*
*44 Ainger Road, London NN3 3AT*
*Tel/Fax: 0171 586 5892*

# குர்திஸ் கவிதைகள்



## எங்கேயிருந்து வருகிறாய் நீ?

**இல்மஸ் குணேவுக்கு** **-ரபீக் ஸபீர்**

இந்த நள்ளிரவில்
எங்கேயிருந்து வருகிறாய் நீ?

இந்தக்குளிர்கால முடுபனி மாலையிலினின்றும் எழும் சூரியன்போல்
எவ்வாறாய் நீ அடிமைத்தனத்தை உடைத்த புழுதியைப் பரப்பிக்கொண்டு எழ முடிந்தது!

இந்நிலம் பனிக்கட்டியாயிருந்தது
எந்தப் பாதையினூடு நீ வந்தாய்?

குர்திஸ்தான் கொடூரமான ஓநாய்கள்
நிறைந்தாயிருந்தது
குற்றச் செயல்களில் மூழ்கியபடி

எந்தப் பாதையினூடு நீ வந்தாய்
நாகரீகத்தின் தீர்க்கதரிசனங்களை
எவ்வாறு நீ கற்றாய்?
ஓநாய்களின் தேசத்தில் தாலாட்டுக்களைப் பாட
எங்கிருந்து கற்றாய் நீ?
எந்தப் பாதையினூடு நீ வந்தாய்?

இந்தப் பலத்த மழையில் நீ கனவுகளில்
தொலைந்தாயா
வானவில்லில் அல்லது
பசியின் யுகத்தில் இப்பருவகாலங்களின்
இடிபாடுகளிடையில்
நீதான் தொடுவானத்தின் முகமாகவந்தாயா
அல்லது
கோதுமையின் பூத்தலாக?

எழும்ஒரு வைகறையில்
உன்னோடு நாங்கள் விழிப்போம்
உனது கனவுகளில்
எமது அடையாளத்தின் தடங்களைக் காண்போம்.

குர்திஸ்தானத்தை அன்பால்
வானவில்களால் தாலாட்டுக்களால்
சத்தியத்தால் நிரப்புவோம்.

## நிலம்

**-ஸெர்கே பேகஸ்**

ஒரு மரத்தின் வாதைத் தொட்டேன்
வலியில் நடுங்கியது.

கிளையில் நான் கைவைத்தபோது
மரஉடல் அழுகிறது
மரத்தை நான் தழுவியபோது
என் கால் நிலம் நடுங்கியது
கற்கள் புலம்பியன

இவ்வேளை நான் குனிந்து ஒரு பிடிமண்ணை
எடுத்தபோது
முழு குர்திஸ் தானும் அழுது புலம்பியது.


## துப்பாக்கி

மலையைச் சந்தோசப்படுத்துவதற்காக
மரங்கள் காற்றைக் கேட்டுக்கொண்டது
புல்லாங்குழல்களைப் போல் அவைகளோடு சேர்ந்து
இசைசேர்க்கும் படி.

தோட்டங்களின் பயத்தைப் போக்குவதற்காக
பறவைகள் மரத்தைக் கேட்டுக் கொண்டது
அலைக்கைகள் கைகோர்த்துக் கொண்டு நடனமாடும்படி.

கவிதைகளை விடுதலை செய்யும் பொருட்டு
பெஸமர்க்கா போராளிகளின் துப்பாக்கிகளிடம்
நிலம் கேட்டுக்கொண்டது
இந்த அடர்ந்த இரவிற்குத் தீயிட்டு
சூரியனின் கரங்களில் விழுந்து மரணிக்கும்படி.





## எனது தேசத்தில்

எனது தேசத்தில்
செய்தித்தாள்கள் ஊமையாகப் பிறக்கின்றன
வானொலிகள் செவிடாக
தொலைக்காட்சிகள் குருடாகப் பிறக்கிறக்கின்றன

இவைகள் ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும்
பிறக்கவேண்டும் என என்தேசத்தில் விரும்புகிறார்கள்

அவைகளை ஊமையாக்கி அதைத் கொல்கிறார்கள்
அவைகளைச் செவிடாக்கி அதைச் கொல்கிறார்கள்
அவைகளைக் குருடாக்கி அதைக் கொல்கிறார்கள்

இதுதான் எங்கள் நாட்டில் நடக்கிறது.

## ஒப்பீடு

சரியாக நள்ளிரவு பன்னிரெண்டுமணி
மிகச்சரியாக
குர்திஸ்தானும் துயரமும் போல
கோர்த்துக் கொண்ட இரு கைகள்

சரியாக நள்ளிரவு பன்னிரெண்டுமணி
எனது கற்பனைபோல
சுத்தமான வெளிர்ந்த சாப்பாட்டுமேசை
இருபது சிகரெட்டுக்கள்
ஒரே ஒரு திறப்பு வார்த்தை

ஒரு மணிக்குப் பின்னால்
என்னையும் எனது நாட்டு **விழியும்போல**
இரண்டு வேறான கடிகாரக் கைகள்.

இரண்டு மணிக்குப் பின்னால்
நாடு கடந்தவர்களும்
அகதி விண்ணப்பதாரர்களும் போல
பேனா காகிதம் மேசையிலிருக்கும் எல்லாம்
குழம்பியபடி சிதறியபடி

மூன்று மணிக்குப் பின்னால்
ஆஸ்ட்ரே நிறைய சிகரட் துண்டுகள்
புகையிலைச் சாம்பல்
அறைநிறைந்த புகை

அதன் அருகே தூங்கும் கவி
விழித்த கவிதை.

## விதைகள்

நாங்கள் பத்துலட்சக்கணக்கானவர்கள்
நாங்கள் முத்த மரங்கள்
புதிதாக வளரும் செடிகள்
விதைகள்.

அங்காரா தலைக்கவசத்திலிருந்து விடிகாலையில்
அவர்கள் வந்தார்கள்
எங்களை வேரோடு பிடிங்கினார்கள்
எம்மைத் தொலைதூரம்
வெகுதொலைதூரம் எடுத்துச் சென்றார்கள்.

வழியில் நிறையப் பழைய மரங்களின்
தலைகள் உதிர்ந்தன
குளிரில் நிறைய புதிய செடிகள் இறந்தன
காலடியில் நிறைய விதைகள் சிதறி
தொலைந்து காணாமற்போயின
மறந்து பட்டன.

கோடைகாலத்தின் சன்னமான நதிபோல்
நாங்கள் கசிந்தோம்
இலையுதிர் காலத்தின் நேரத்தினுள்
பறவைக் கூட்டம்போல் நாம் மறைந்தோம்
ஆயிரக் கணக்கில் மங்கலாகினோம்.

எம்மிடம் விதைகளிருந்தன
காற்று மறுபடி கொண்டுசேர்த்த விதைகள்
பசிகொண்ட மலைகளை மறுபடி அவை சேர்ந்தன.

பாறைகளின் வெடிப்பில் அவை மறைந்து கொண்டன
முதல் மழை
இரண்டாம் மழை
மூன்றாம் மழை
மறுபடி அவை வளர்ந்தன
மறுபடியும் நாங்கள் ஒரு ஆரண்யம்.
நாங்கள் பத்து லட்சக் கணக்கானவர்கள்
நாங்கள் விதைகள்.

செடிகள்
முத்த மரங்கள்
பழைய தலைக்கவசம் செத்தது!

**இப்போது நீங்கள் புதுத்தலைக் கவசம்**
**ஏன் நீங்கள்**
**ஆகாயத்தின் தலையை**
**உங்கள் கீழ் வைக்கப் பார்க்கிறீர்?**

**எனக்குத்** தெரியும்
**அது** உங்களுக்கும்கூடத் தெரியும்

ஒரேயொரு விதை இருக்குமட்டும்
மழைக்கும் காற்றுக்கும்

இந்த ஆரண்யம் எந்நாளும் முடிவுறாது.





# முடிவுற்ற முடிவுறாத கவிதை

**லத்தீப் ஹர்மத்**

கற்கள் சந்தோசத்தையோ துக்கத்தையோ
உணர்வதில்லை
அது எவரையும் வெறுப்பதோ நேசிப்பதோ இல்லை
காதலில் ஈடுபட கற்களுக்கு இதயமும் இல்லை.
தமது காதலர்களுக்கு கடிதங்களோ கவிதைகளோ எழுத
அவற்றுக்கு கைகளில்லை.

வீதிக்கு வீதி துரத்தி அவை
காதலுக்கு அலைவதில்லை
கற்களுக்கு ஓடுவதற்கு கால்களுமில்லை
காவலர்கள் அவைகளை கைது செய்ய வரும்போது.

இறந்து விட்டால் அழுவதற்கு அவைகளுக்கு
அம்மாக்களும் இல்லை
தவறான வழி நடந்தால் நெறிப்படுத்த அவர்களுககு
தகப்பன்களும் இல்லை
அர்ப்பணிப்பதற்காக கற்களுக்கு குறிப்பிட்ட
தேசமும் இல்லை
எங்கே இவைகள் கிடக்க நேர்கிறதோ
அங்கே ஓய்வாக இருக்க இடம்பிடிக்கும்
இறுக்கமாக இருந்துவிடும்.

கற்கள் தமது கடந்த காலத்தை நினைக்கமுடியாது
அவைகளுக்கு நினைவுகளை மீட்கவும் முடியாது
மாறாக இருந்திருந்தால் எப்போதேனும் அவை ஒரு
கவிதையோ
ஒரு கடிதமோ எழுதியிருக்கக் கூடும்.

இவையெல்லாம் இருந்தாலும் கூட நமது
முதாதையர்கள் சொல்லியிருக்கிறார்கள்
'கற்கள் அவை இருக்கும் இடத்திற்கே பாரம்'
மனிதர்களும் அப்படித்தான்.

# நாம் வாழும் காலம்

நாம் வாழும் காலம் பொக்கையான
அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளின் காலம்
போலியாக கும்பிட்டு வாழும் கவிகளின் காலம்
வியாபாரமயமான
சிந்தனை மூளை இதயத்தின் காலம்
சுதந்திர சாவின் காலம்
ஒன்றாகவோ கூட்டமாகவோ நாம் சாவதற்காக
மரணம் ஒவ்வொரு தெருமுனையிலும் காத்திருக்கிறது.
கொஞ்சம் எதிர்பார்த்த இடத்திலும்
சாவு உனது காவலாள் உனது சேவகத்திற்கு நிற்கிறது.

குழப்பங்களின் சிக்கல்களின் காலம்
ஒவ்வொரு வார்த்தையும்
நூற்றுக்கணக்கான தானியங்கி எலக்ட்ரானிக்
சாதுரியங்களில் சிறைப்படுத்தப்பட்ட
வார்த்தைகளின் காலம்
முதலாளித்துவவாதிகளின் நலன்களுக்கு சேவகம் செய்ய.
நல்லது கெட்டதுக்கிடையில் அழிவுவேலைசெய்ய
நாம்கற்றுக்கொள்ள வேண்டும்
ஐஸ் கிரீமைவிட முடியலங்காரங்களைவிட
கழுத்து அங்கிகளைவிட முத்தங்களைவிட நாம்
உண்மையை நேசிக்க வேண்டும்.

# பட்டாம்பூச்சித் தூக்கம்

**மொஹமட் காகி**

அன்பு மகள் அலனுக்கு:
வீட்டைப்பிரிந்த சோகத்தின் கிழக்கு திசையினின்று
இடம்பெயர்ந்து மீண்டுவரும் பறவைகளே!
எனது குட்டிமகளை நீங்கள் பார்த்தீர்களா?

காற்றே!
ஏன் மௌனம்?
எனது துக்கமான படபடக்கும் சின்னச்சிட்டைப்
பார்த்தீரோ?

அலைகளே, சத்தம் போடாதீர்கள்.

காற்றே, வனங்களைக் கலைக்கவேண்டாம்.

பட்டாம்பூச்சிகளே, உமது சிறகை மெல்ல
அசையுங்கள்
அல்லவெனில் நீங்கள்
தூங்கும் எனது மகளின் கனவு இழைகளைக்
கலைத்து விடுவீர்கள்.



# விழிப்பு

**அப்துல்லா பெலரி**

மூன்றிலிரண்டு பகுதி இரவு கடந்துவிட்டது
தூங்கு என் மகவே
எனது உள்ளங்கையில் தலை வைத்துக்கொள்
எனது தோள்களில் படுத்துக்கொள்
நான் தூங்கக்காத்திராதே
இன்று நான் விழித்திருக்கவேண்டும்
நான் தூங்கமுடியாது.

நீ படுத்தவுடன் தூங்கிப் போவாய்
இயற்கை கடின முகம் கொண்டது அதன் மூச்சு
கடினமானது.

காற்றின் சப்தம் மரங்களின் இரைச்சல்
மேகங்களின் உறுமல் மழைத் தூறல்
கடவுளே, உன்னை எழுப்பிவிடும் என்று நான்
பயப்படுகிறேன்
அல்லது
உனது கனவுச் சங்கிலியின் சின்ன இழைகளை
அறுத்துவிடுமென

தூங்கு என் மகவே
எனது உள்ளங்களில் தலைவைத்துக்கொள்
எனது தோள்களில் படுத்துக்கொள்
நான் தூங்கக் காத்திராதே
உன்னைப் பாதுகாக்க நான் தூங்காதிருக்க வேண்டும்
நான் தூங்க முடியாது.



# இரவினூடு பயணங்கள்

-ஸகின் ஸோரக்லி

மூன்றுமுறை நான் பிறந்தேன்
முதல்முறை குர்திஸ்தானின்
அடக்குமுறை ஆட்சிசெலுத்திய நிலத்தில்
வரலாறு நெருப்பிலும் இரத்தத்திலும்
எழுதப்பட்ட நாட்டில்
மனித உரிமைக்கு அர்த்தமேதுமற்ற நாட்டில்

எனது இரண்டாம் பிறப்பு வியன்னா 1965
அது அழகானதென்றும் சொல்லலாம்
வியன்னா பற்றி முக்கியமாகச் சொல்ல
ஏதுமில்லை
காசற்ற அன்னியன் நான்
எனது அலைதல் தொடங்கியது பொனாக்லியா
வந்து சேரும்வரை

எனது மூன்றாம் பிறப்பு ஓக்டோபர் 1968
இப்போது நான் பின்நோக்கிப் பார்க்கையில்
அவுஸ்திரேலியா எனக்கு என்னென்ன கொடுத்தது
என உணர்கிறேன்.
ஆனாலும் எனது இதயம் சிந்தனை எல்லாவற்றிலும்
நான் எனது முதல் பிறப்பினால் நிறைந்திருக்கிறேன்.
ஒவ்வொரு இரவும் குர்திஸ்தான் கல்லறைகளை
மறவாதேயென
என் தாய் கதறுவதைக் கேட்கிறேன்.

நான் ஒருமுறை கேட்டேன்: ஏன் கல்லறைகள்
தாயே ஏன் கல்லறைகள்?
அவள் மறுமொழி சொன்னாள்: என் மகனே,
குர்திஸ்தான்
கல்லறைகளில்தான் வாழ்கிறது
நள்ளிரவுக்குப்பின் என் உடம்பை சிட்னியில்விட்டு
துயரமும் சித்திரவதையும் நிறைந்த நாடுநோக்கி
சமுத்திரம் மீது பறந்தேன்
துன்பத்தினூடேயும் சாவினூடேயும் குர்திஸ் மக்கள்
தமது நாட்டை உயிருடன் வைத்திருந்தார்கள்.
நிறையக் கல்லறைகள் குர்திஸ்தானில் இருந்ததால்
என்தாயின் கல்லறையை நான் அடையாளம்
காணமுடியவில்லை
எல்லா வகையிலுமான கல்லறைகள்.

ஹலாப்கொவிலிருந்து டெஸ்ரிம்வரை
ஹர்கலைக்கிலிருந்து அகிரிவரை
மகாபத்தென் ஹவ்லரிலிருந்து அடிவரை
அழிவின் சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட மக்கள்
சாவின்பின்பமான தமது போராட்டம் கூட
நம்மை
அலைக்கழித்துக்கொண்டு

துக்கத்துடனும் சோர்வுடனும்
நான் ஸிட்னி திரும்பினேன்.
பிறிதொரு இரவு என்தாய் அழைத்தபோது
நான் சொன்னேன்,
"அம்மா, அன்பு அம்மா
ஒரேஒரு இரவுக்கு குர்திஸ்தான் கல்லறைகளை
என்னிடமிருந்து பிரித்துவை" என்றேன்.

ஆழ்ந்த நிதானத்துடன் அம்மா வினவினாள்:
நிஜமாக நீ உறங்க முடியுமா என் மகனே?
எனது இதயத்தை அன்பாகத் தழுவினாள்
குர்திஸ்தானுக்கு
திரும்பவும் அதை எடுத்துச் சென்றாள்.

## கவிகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள்:

ரபீக் ஸபீர்: 1950ஆம் ஆண்டு தென் குர்திஸ்தானில் பிறந்தவர். பாக்தாத் பல்கலைக் கழகத்தில் குர்திஸ் மொழியில் பட்டம் பெற்றவர். 1978இல் குர்திஸ் கொரில்லா இயக்கத்தில் சேர்ந்தார். 1988இல் குர்திஸ் மக்களின் கலாசார சரித்திரத்தில் ஸோபியா பல்கலைக்கழக கலாநிதி பட்டம் பெற்றார். நவீன குர்திஸ் கவிகளில் மிக முக்கியமானவர்.

ஸெர்கே பேகஸ்: 1940ஆம் ஆண்டு ஈராக்கைச் சேர்ந்த தென்குர்திஸ்தானில் பிறந்தவர். பெய்க் பேகஸ் எனும் முத்த தலைமுறையில் புகழ்பெற்ற கவியின் மகன். 1965இல் இயக்கத்தில் சேர்ந்து குர்திஸ் வானொலி பொறுப்பாளராக இருப்பவர். 1987இலிருந்து ஸ்வீடனில் வசிக்கும் இவர் 1987ஆம் ஆண்டு ஸ்வீடனில் PEN அமைப்பின் பச்சோல்ஸ்சி பரிசைப் பெற்றவர். அதே ஆண்டு Freedom of the City & Folrence விருதைப் பெற்றவர்.

லத்தீப் ஹல்மத்: 1947ஆம் ஆண்டு தென் குர்திஸ்தானில் பிறந்தவர். பத்திரிகையாளராகப் பணி புரிகிறவர். இதுவரை 5 தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார். நவீன கவிகளில் முக்கியமானவர்.

மொஹமட் காகி: 1953ஆம் ஆண்டு குர்திஸ்தானில் பிறந்தவர். டெஹ்ரான் பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பெற்றவர். குர்திஸ் வானொலியில் பணியாற்றியவர். 1990 இறுதியிலிருந்து லண்டனில் வாழ்ந்து வருகிறார். அம்னஸ்ரி இன்ரனாஷனலின் அமைப்பின்வழி செயற்பட்டு வருகிறார்.

அப்துல்லா பெஷீ: 1945ஆம் ஆண்டு பெர்க்கா கிராமத்தில் பிறந்தவர். ரஷ்யா, லிபியா, ஸ்வீடன் போன்ற நாடுகளில் புகலிடக் கவியாக வாழ்ந்தவர். மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். மூன்று தொகுப்புக்கள் வெளியிட்டிருக்கிறார்.

ஸகின் பி ஸோரக்லி: 1947ஆம் ஆண்டு மஸ்ரா நகரில் பிறந்தவர். 1968ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் வாழ்கிறார். ஆசிரியர். ஆஸ்திரேலியாவில் குர்திஸ் மொழி நிகழ்ச்சியின் வானொலி இயக்குநர்/கூட்டமைப்பாளராகச் செயல்பட்டு வருகிறார்.

# ஆபிரிக்க சினிமா

## பத்து இயக்குநர்கள் பத்து திரைப் படங்கள்

யமுனா ராஜேந்திரன்



### I. அறிமுகம்

கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஆபிரிக்காவிலிருந்து வந்த திரைப்படங்களில் என்றென்றைக்கும் சாகா வரம்பெற்ற திரைப்படங்களாகச் சொல்லப்படும் 25 படங்களில் அடங்கும் பத்து திரைக்காவியங்களைப் பற்றியது இக்கட்டுரை. ஆபிரிக்க சினிமா பற்றி வெளியாகின எல்லா புத்தகங்களிலும் குறிப்பிடப்படும் படங்கள் இவை. 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் லண்டனில் நிகழ்ந்த ஆபிரிக்க கலாசார விழாவை யொட்டியே இத்திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. இப்படங்கள் சொல்லும் வாழ்வு மூலம் ஆபிரிக்கக் கண்டத்தின் குறுக்குவெட்டு முகம் நம்முன் திறபடும். இந்தப் பத்துப் படங்களில் முதல் நான்கு படங்கள் ஆபிரிக்க மக்களின் காதல் வாழ்வு பற்றியவை. மூன்று படங்கள் அவர்களின் நெடிய போராட்ட வாழ்வு பற்றியவை. இறுதி மூன்று படங்கள் ஆபிரிக்கக் குழந்தைகளின் உலகினுள் நுழைந்து சென்று நோக்குபவை.

படங்களின் இயக்குநர்கள், வெளியான ஆண்டு, அது சொல்லும் உலகு பற்றிய குறிப்புகளை பூர்வாங்கமாகக் கொடுத்துவிட்டு பிற்பாடு விஸ்தாரமான அம்மக்களின் கலாசார வாழ்க்கைக்குள் நுழைவோம்.

1. நிலப்பிரபுத்துவம் பெண்ணடிமைத்தனம்
   காதல் மரபுகள் பற்றியவை
   MUNO MOTO (1924)
   இயக்குநர்: Jean Pierre Dikonsue Pipa
2. மதம் பாலுறவு மாந்திரிகம்
   பாலியல் வன்முறை பெண்களைப் பற்றிய
   பிரமைகள் பற்றியது.
   Man of the Ashes (1988)
   குனிசியா
   இயக்குநர்: Nouri Bouzid
3. வெளிநாட்டுக் கனவு காணும் அடிமாடுகள்
   புரட்சி கற்பனைகள் பற்றியது
   Touki Bouki (1973)
   செனிகல்
   இயக்குநர்: Dijibril Diop Momibety
4. இயக்குநர்கள் வேலை நிறுத்தம் ஜனநாயகம்
   ரோமியோ ஜூலியற் கிளியோபாட்ரா முதிர்
   வயது காதல் பற்றியது
   Alexandria Again And Always (1990)
   எகிப்து
   இயக்குநர்: Yousof Chahine
5. நாடோடி வாழ்வு வறட்சி விடுதலைப்போர்
   மனம் பேதலித்த கதை சொல்லி பற்றியது.
   Years of the Brazier (1985)
   அல்ஜீரியா
   இயக்குநர்: Mohammed Lakhadar Hammhva
6. அடிமைத்தனம் மதம் பாலைவன வாழ்வு
   புலம்பெயர்தல் பற்றியது
   Ahaihu Umar (1976)
   நைஜீரியா
   இயக்குநர்: Admu Halilu
7. கால்நடை மேய்ப்போர் உழவர்
   வேலையின்மை வறட்சி
   3000 ஆண்டு பொதுமக்கள் தாழிகள் திருட்டு
   ஜீவிதம் பற்றியது.
   The Night of Counting the Years (1969)
   ஐக்கிய அரபுக் குடியரசு/ எகிப்து

இயக்குநர்: Shadi Abdel Salem

8. குழந்தைகள் மரபு மாந்திரீகம் தாயுரிமை வம்சாவழி பற்றியது
Yaaba (1989)
பார்க்கினா பாசோ
இயக்குநர்: Odissa Ouedrago

9. அநாதைச் சிறுவன் நாடோடி வாழ்வு புல்லாங்குழல் ஆணாதிக்கச் சமூகம் குழந்தைகள் உலகு பற்றியது.
The Gift of God (1982)
பர்கினோ பாசோ
இயக்குநர்: Gaston Koboire

10. அதிகாரவெறி இயற்கை உற்பவம் தலைமுறை இடைவெளி பேரழிவு பற்றியது
Yaleen (1987)
மாலி
இயக்குநர்: Soleymane Cisse.

## II. நான்கு காதல் படங்கள்

'முனோ மியூட்டோ' படம் ஒரு காமரூன் நாட்டு கிராமத்தில் நிகழ்கிறது. கதையில் மூன்று பாத்திரங்கள் முக்கியமானவை. நிகேண்டோ எனும் விவசாயி. நிங்தோம் எனும் அதே கிராமத்து இளம் பெண். நிகேண்டேயின் மாமன். அவர்தான் நிலம் வைத்திருப்பவர். ஏற்கனவே அவருக்கு நான்கு மனைவியர். நான்கு பேருக்கும் குழந்தைகள் இல்லை. குழந்தையின்மைக்கு அவர்களை சூனியக்காரிகள் என சபிக்கிறான் நிலப்பிரபு. குறை தன்னிலிருக்கலாம் என்ற பிரக்ஞைகூட அவருக்கில்லை. ஏனெனில் அவரால் எத்தனை பெண்களையும் விலை கொடுத்து வாங்கி தீனி போட முடியும். அவருக்கு நிங்தோமையும் மணந்து கொள்ள ஆசை. நிகோண்டோவைத் தடுக்கிறார்.



நிறைய வெளிநாட்டு மதுவகைகள், சேலை துணிமணி சீர்வரிசைகளோடு போய் பெண் கேட்கிறான் மாமன். நிங்தோமின் தகப்பனுக்கு ஆட்சேபணையில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் காசு. முதலில் மறுக்கும் நிங்தோமின் தாய் சீர்வரிசைகளைப் பார்த்ததும் மௌனமாகிறார். ஆபிரிக்காவில் பெண்களை காசு கொடுத்து வாங்கலாம், தமக்கு சொத்து வந்தால் பெண்களைக் குற்றவுணர்வின்றி விற்கும் கலாசாரம்.

நம் கலாசாரத்திற்கு நேர்எதிர். மாப்பிள்ளைக்கு விலை. மாப்பிள்ளைகள் விலங்குகள்.

சரி. நிகேண்டோவும் நிங்தோமும் ஒரு முடிவு செய்கிறார்கள். கல்யாணத்திற்கு முன்பே கன்னி கழிந்துவிட்டால் கழிசடை என மாமன் தன்னை விட்டு விடுவான் என நினைத்து நிங்தோவும் நிகண்டோவும் காட்டுக்குள் ஒரு மணல் மேட்டில் இரவு முழுக்க புணர்ந்தபடி கிடக்கின்றார்கள். இவ்விஷயம் தாய்க்கும் தகப்பனுக்கும் மாமனுக்கும் சொல்லப்படுகிறது.

இவர்களில் எவருக்கும் அது பிரச்சினையில்லை. மேலாக மாமனுக்கு வேண்டியதெல்லாம் தன் மனைவிக்கு ஒரு குழந்தை. அதன் மூலம் அவரது வாரிசு பரம்பரை பெருமை வளர்த்துக் கொள்ளும்.

குடும்ப அமைப்பு ஆபிரிக்க சமூகங்களில் புனிதம். நிகேண்டோ அதை வணங்குபவன். நிங்தோம் நிலப்பிரபுக்கு மனைவியாக நாள் கழிகிறது. குழந்தை பிறக்கிறது. குழந்தைப் பாசம் நிகேண்டோவையும் நிங்தோவையும் மறுபடி அருகில் கொணர்கிறது.

நிகேண்டோ நிங்தோமோடு குடிவந்து விடத் தயார். நிங்தோவும் ஆசை. ஆனால் மரபை என்ன செய்வது. ஒரு மனைவியின் இடம் கணவனின் வீடுதான் என்கிறான் நிகேண்டோ. ஒருமுறை இருவரும் காட்டில் சந்திக்கும்போது நிகேண்டோ மாமனின் கையாட்களால் அடித்துப் போடப்பட்டு நிங்தோ இழுத்துச் செல்லப்படுகிறாள். குழந்தையைப் பார்ப்பதற்கு நிகேண்டோவை அனுமதிக்க மாட்டேன் என்கிறான் மாமன். குடும்பத்தில் பிரச்சினை வெடிக்கிறது.

நிகேண்டோவிற்கு முதலில் குழந்தை வேண்டும். அது அவன் வாரிசு அல்லவா? நிங்தோமைப் பற்றிய அவனது நிலைப்பாடு உறுதியில்லாதது. நிங்தோமுக்கு நிகேண்டோவோடு ஓடிப்போக விருப்பம். ஆனால் அவன் குழந்தையை மட்டுமல்லவா வேண்டுகிறான்?. மாமனுக்கும் குழந்தைதான் வேண்டும். மனைவி அவனுக்கு உடமை. அவ்வளவுதான்.

ஊரில் ஒரு திருவிழா நடக்கிறது. நிங்தோம் குழந்தையோடு திருவிழாவிற்கு வந்திருக்கிறாள். நிகோண்டோ தேடித் தேடிப் பார்த்துக்கொண்டே கூட்டத்தை விலக்கிக்கொண்டு போகிறான். குழந்தையைக் கண்டு விட்டான். குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு ஓடுகிறான். நிங்தோ துரத்துகிறாள். ஊரே துரத்துகிறது. மாமன் அடியாட்களோடு வருகிறான். போலீஸ் வருகிறது.

நகரத்தில் தெருக்களில் கார்களும் பஸ்களும் வாகனங்களும் விரைந்து கொண்டிருக்க அவைகளிடையில் புகுந்து விலங்குகளிட்ட நிலையில் நிகேண்டோ போலீஸ்காரர்களால் நடத்திக் கூட்டிச் செல்லப்படுகிறான்....

2.

'மென் ஆப்த ஆஸஸ்' / சாம்பலிலிருந்து எழும் மனிதன் படம். டுனிசிய நாட்டுப் படம். டுனிசியா இஸ்லாமிய மதப்பற்றுள்ள நாடு.

ஹச்சமியும் பர்பாத்தும் நண்பர்கள். தச்சுத் தொழில் செய்யும் தொழிலாளர்கள். ஹச்சமிக்குத் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. பிரச்சினை அங்குதான் வருகிறது. ஹச்சமிக்குப் பெண்களைக் கண்டால் பயம். அவர்களின் உடல் சார்ந்த அனுபவங்களை நினைத்துப் பார்க்கவே பயம். தனது ஆணுறுப்பின்மேல் அவனுக்கு பயமும் எரிச்சலும் இருக்கிறது.

அவனது பிரச்சினையின் வேர்தான் என்ன? அவர்களின் முதலாளி, நண்பர்கள் இருவரையும் ஓரிணப்புணர்ச்சிக்குப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். அந்த அனுபவம் பலாத்காரமான ஓரிணப்புணர்ச்சி அவர்கள் சிறுவர்களாயிருந்ததிலிருந்து இன்றுவரை தொடர்ந்திருக்கிறது. இந்த அனுபவம் அவர்களுக்கு ஆண்பெண் உறவு பற்றிய மனச்சிக்கலைக் கொணர்ந்திருக்கிறது.

ஹச்சமி பெரிய குடும்பத்துப் பிள்ளை. பாட்டி, பூட்டி, தாய் தகப்பன் அவர்கள் பரம்பரை, அண்ணன், தம்பி எனப் பெரிய குடும்பத்தில் ஒருவன். அவன் திருமணத்திற்கு பயப்படுவது எல்லோருக்குமே பிரச்சினையாக இருக்கிறது. அவனுக்குத் தீய ஆவி பிடித்து விட்டது என எல்லோருமே நம்புகிறார்கள். பாட்டியின் அம்மா அந்தக் குடும்பத்திற்குத் தேவதை. அந்த மனுஷி ஹச்சமிக்குப் பூசைபோட்டு ஆவியைக் காட்டுகிறாள். வீடே அல்லோல கல்லோலபட ஹச்சமி எரிச்சலுடன் வெளியே ஓடுகிறான்.

பர்பாத்தின் பிரச்சினை இன்னும் துக்கமானது. அவனுக்கு பெரிய வயது நண்பர்கள் உண்டு. ஹச்சமியும் பர்பத்து சந்தர்ப்பவசமாக ஒரு பொது மது விடுதியில் அவர்களைச் சந்திக்கிறார்கள். பிரச்சினை பேசப்படுகிறது. எல்

லோரும் சேர்ந்து விலைமகளிர் விடுதிக்குப் போவதெனப் தீர்மானிக்கப்படுகிறது. நள்ளிரவில் போய் ஒரு வீட்டுக் கதவைத் தட்டுகிறார்கள். அங்கே யாருமில்லை. தட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். அடுத்த வீட்டிலிருந்து வரும் முதாட்டி நன்றாக உறுதியாகப் பெண்கள் வருவார்கள் எனச் சொல்ல முடியாது என்கிறாள்.

கொஞ்ச நேரம் காத்திருங்கள் பெண்களுக்கு இங்கு பிரச்சினைகள் இரண்டு பேர் வருவதாகச் சொல்லியிருக் கிறார்கள், எதற்கும் காத்திருந்து பார்ப்போம் என்கிறார்கள். கதவு தட்டப்படுகிறது. வந்து விட்டார்கள், பர்தா அணி ந்த பெண்கள்.

போனவர்கள் நான்கு பேர். அதில் இரண்டு பேர் ஹச் சமியும் பர்த்தாவும். மற்றவர்கள் இவர்களின் நண்பர்கள். அதில் ஒரு நண்பனுக்கும் பர்தாவுக்கும் ஒரு பெண் சம்பந்தமாகப் பிரச்சினை வருகிறது. ஹச்சாமி நடனமாடிய படி இருந்தவன் உடனே அடிதடியில் இறங்கிவிடுகிறான். மற்றப் பெண்களை தரதரவென இழுத்துக்கொண்டு அறைக்குள் போகிறான்.

ஹச்சாமி மற்றொரு பெண்ணோடு வேறொரு அறைக்குள் நுழைகிறான். அவனுக்குப் பயம், மனக்கிலேசம், தயக்கம், மனச்சிக்கல், பிராந்தி. பெண் முக்காடிட்டபடி மௌனமாக அமர்ந்திருக்கிறாள். மெல்ல முக் காட்டை நீக்கி முகத்தை ஏந்துகிறான் ஹச்சாமி. அழகான பெண். இத மான நெற்றியில் முத்தமிடுகிறான். அந்தக் காட்சி அன்பும் ஆர்வமும் காமமும் தேடுதலும் நிறைந்த அழ கான புணர்ச்சிக் காட்சி. அவளுக்கு அவன் விசேசமானவன். அவளது வாஞ்சையை ஹச்சாமியால் மறக்க முடிவதில்லை. பிரிய முடியாமல் விடை பெறுகிறான்.



புணர்ச்சி முடிந்த பர்பாத் வெறி கொண்டவன் மாதிரி வெளியே ஓடுகிறான். நண்பர்களும் ஹச்ச மியும் துரத்திக் கொண்டே ஓடுகி றார்கள். எங்கே ஓடுகிறான் அவன்? ருனீசிய அல்ஜீரியத் தெருக்களின் அழகு ஸ்பானிய இத்தாலியத் தெருக்களின் அழகை ஞாபகமூட்டுகிறது. சந்து பொந்துகளில் ஓடிக்கொண்டேயிருக் கிறார்கள். தச்சுத் தொழிற்சாலை எஜமான் வந்து கொண் டிருக்கிறான். அவனைத் தேடித்தான் பர்பாத் வந்திருக்கிறான். பர்பாத் மடியில் கத்தி. கூரான கத்தி. எஜமானின் அடிவ யித்தில் குறியிருக்கும் பிரதேசத்தில் கத்தியை சொருகிவிட்டு ஓடுகிறான் பர்பாத். போலீஸ் வருகிறது. ஓடிக்கொண் டிருந்தவன் கட்டிடங்களின் மீது தாவி மறைந்து போகிறான்.

பர்பாத் மறுபடி குளித்துக்கொண்டிருக்கிறான். படித் துறையில் சிறுவன். போலீஸ் வருகிறது. துரத்துகிறார்கள். பர்பாத் கைகளை பறவைகளைப் போல விரித்தபடி கைவீசி வீசிப் பறக்கிறான். இடையில் ஒரு ரயில்வேத் தண்டவாளம். பர்பாத். போலீஸ்காரர்கள். ரயில் வேகமாக வந்து கடந்து வேகமாகப் போகிறது. பர்பாத்தைக் காண வில்லை. அவன் பறந்து விட்டான். சுதந்திரப் பறவை அவன்.

ஹச்சமி மறுபடி திரும்பவும் விலைமாதர் விடுதிக்கு வருகிறான். அவனுக்கு மறுபடி அப்பெண்ணைப் பார்க்க வேண்டும். அவளுக்கு அன்பளிப்பாக விலையுயர்ந்த சிவந்த ஆடையொன்றும் கொண்டு வந்திருக்கிறான். முதாட்டி மறுத்து விடுகிறாள். அப்பெண்ணை அவள் உள்ளே போகச் சொல்கிறாள்.

ஹச்சமியைப் பார்த்துச் சொல்கிறாள்: “மகனே! இங்கேயிருக்கும் பெண்கள் மிக நெருக்கமான உணர்ச்சி பூர்வமான உறவு கொள்வதை நான் விரும்பவில்லை. அது துக்கமாகவே முடியும். மன்னிக்கவும். உன் ஆடையை நீயே திரும்ப எடுத்துக் கொண்டு போகவும்.”

3.

*TOUKI BOUKI*. கழுதைப் புலியின் பயணம். செனிகல் நாட்டுப் படம்.

படத்தின் நாயகன் மௌரி. நாயகி அன்டா. மௌரி அடிமாடுகளை ஓட்டிச் செல்பவன். செனிகல் தலைநகர் தாக்கமுக்கி அடிமாடுகளை ஓட்டிவந்த அவன் அப்பணத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்குகிறான். மோட்டார் சைக்கிளில் எருதுவின் கொம்புகளை ஹாண்டிலில் பொருத்தி வைக்கிறான். மோட்டார் சைக்கிள் அவனுக்கு எருதுவை ஞாபகமூட்டுகிறது.

அன்டா, சமூக மாற்றத்தில் நம்பிக்கைகொண்ட ஒரு கல்லூரி மாணவி. மௌரி, தான் பாரிஸ் போவதற்கு முயற்சி செய்வதாகவும் அன்டாவையும் அழைத்துச் செல் வதாகவும் சொல்கிறான்.

இப்படம் ஆபிரிக்காவின் முதல் Avant-Garde படம் எனச் சொல்லப்படுகிறது. காட்சியமைப்புகள் பிரெஞ்சு இயக்குநர் கோடார்டின் காட்சிச் சிதறடிப்புக்களை ஞாப கமூட்டுவதாக விமர்சகர்கள் சுட்டுகிறார்கள்.

அது உண்மைதான். நிறையத் தெருக்காட்சிகள், பிரதான கதைக்கு சம்பந்தமில்லாதது போல வந்து போகிறது. நிகழ்ந்ததை அப்படியே கமராப்படம் சப்தம் போல் கலவரம் போன்றவற்றோடு சில காட்சிகள் பதிவு செய்கிறது.

தண்ணீர்க் குழாயில் தண்ணீர் பிடிக்க வரிசையில் நிற்கிறார்கள். திடீரென வந்த ஒருத்தி இடையில் நுழைகிறாள். குடுமைப்பிடி சண்டை நடக்கிறது. சேற்றில் புரள்கிறார்கள். வரிசையைச் சரிப்படுத்த நின்று கொண்டிருந்த அரசாங்க ஆள் இடையில் அகப்பட்டு செமத்தையாக எல்லோரிடமும் அடிவாங்குகிறான். ஆட்டைக் கொல்வதற்காக கழுத்தைக் கீழே அமுக்கிப் பிடித்து நரநரவென்று கத்தியால் அறுக்கிறார்கள். இரத்தம் பீச்சிடுகிறது. நுரைநுரையாக இரத்தம் பாத்திரத்தில் நிறைகிறது. அடிமாடுகள் இரும்புத் துண்டுகளால் அடிக்கப் பட்டுக் கீழே விழுந்தவுடன் நீண்ட வாள்களால் கழுத்து அறுக்கப்படுகிறது. அறை முழுக்க தரையில் சுவற்றில் அடர்ந்த சிவப்பான இரத்தம் பாய்கிறது. தெறிக்கிறது. உறைகிறது. முள் கொக்கிகளில் மாட்டின இறந்த உடம்பு கள் சொருகி நகர்த்தப்பட்டு இயந்திரங்கள் மாமிசத்தை வெட்டித் தள்ளுகிறது. சிவப்பு வண்டிகளில் துப்பாக்கிகளுடன் வரும் சிவப்பு உடைக்காரர்கள்,மௌரி, புரட்சியைக் கேவலப்படுத்திப் பாரிசுக்கு ஓடிப் போவதாகத் திட்டமி டுகிறான் எனச் சொல்லி மோட்டார் சைக்கிளை கயிறில் கட்டி இழுத்துப் போகிறது. மௌரி இழுத்துக் கீழே வீசப் படுகிறான். இரத்தம். கவுச்சி. கலவரம். குரூரம். அதிகா ரம். தப்பித்தல். கடல் அலைகள் விசிறி விசிறி அடிக்கி றது. அன்டா புழுதிக் குன்றின் மேலிருந்து கீழே இறங்கி வருகிறாள். ஆட்டுத் தலை நறுக்கப்படுகிறது. எருதுக் கொம்புகளுடன் மோட்டார் சைக்கிள் சாய்ந்திருக்க கடல் விரிந்திருக்க கரும் பாறை களில் புணர்ந்தபின் அம்மணமாக இருக்கி றார்கள் மௌரியும் அன்டாவும்.

ஒரு கடற்கரை கிராமமொன்றில் மௌரிக்குத் தெரிந்த பணக்காரன் ஒருவன் இருக்கிறானென்றும் அவன் உதவியுடன் நாம் பாரிஸ் போகலாம் என்கிறான் மௌரி. அவனிடம் செல்லும் மௌரியும் அன்டாவும் அவனை ஏமாற்றி துணி, பணம் எல்லாவற்றையும் பெட்டிகளில் நிறைத்துக்கொண்டு அவனது கசமுசா நிறக்காரையும் எடுத்துக்கொண்டு தம் சொந்தக் கிராமத்திற்கு வருகிறார்கள். பணக்காரனுக்கும்

மௌரிக்கும் என்ன உறவு? பணக்காரன் ஓரினப்புணர்ச் சிக்காரன்.

கிராமத்து மக்கள் அன்டா மௌரியின் காரைச் சுற்றிச் சுற்றிப் பாட்டுப் பாடி வாழ்த்தி ஆடுகிறார்கள். விதவிதமாக பாட்டுப்பாடி விதவிதமாக ஆடை பரத்தி ஆடுகிறார்கள். கொஞ்சப் பணத்தை, கடன் தரவேண்டியதை வீசியெறிந்து விட்டு பயணத்தைத் தொடங்குகிறார்கள் இருவரும். விமான டிக்கட் எடுத்துக்கொண்டு துறைமுகம் போகிறார்கள்.

பணக்காரன் அரசாங்கத்தில் மிகச் செல்வாக்குள்ளவன். அடித்துச் சொல்லிவிட்டான். கப்பல் ஏறப்போகும் நேரத்தில் துறைமுக அலுவலகத்திலிருந்து மௌரி அவசரமாக அலுவலகத்திற்கு வரவும் என மைக் துறைமுகமெங்கும் அலறுகிறது. மௌரிக்குத் தான் பிடிபட்டுவிட்டது தெரிகிறது. கப்பலில் ஏறிவிட்ட அன்டாவிடம் தான் சீக்கிரமே திரும்பிவிடுவதாகச் சொல்லிவிட்டுத் துறைமுகத்தைவிட்டு ஓடுகிறான் மௌரி. மௌரி கைவிட்ட மோட்டார் சைக்கிளை ஒரு வெள்ளையன் ஓட்டி விபத்தொன்றில் அடிபட்டு தெருவில் கிடக்க மௌரி சேதமான மோட்டார் சைக்கிளை எடுக்கிறான். சின்னச் சம்பவமொன்று ஞாபகம். முன்னொருமுறை குத்துச் சண்டையில் வசூலாகி பிரெஞ்சு அரசுநிதிக்குப் போகும் காசுப் பெட்டியைக் களவாடுவதாக நினைத்து பாழடைந்த நகர ஒதுக்குப்புறக் கட்டிடத்திற்குக் கொண்டுபோய் அதனுள் எலும்புக் கூடுகள் இருக்கக் கண்டு கனவு இடிகிறது மௌரிக்கும் அன்டாவிற்கும். மௌரி மிகுந்த பயத்துடன் கலவரத்துடன் அழுக்குப் படிந்த நீண்ட படிகளில் ஒன்றில் அமர்ந்திருக்கிறான். ஒரு இடத்தில் கையில் குண்டாந்தடியுடன் யாரோ வருகைக்காக காத்திருக்கிறான் அமைதியற்று மனம் பேதலித்தவன் போல தோற்றம் தரும் ஒருவன்.

கப்பல் தளத்தில் பிரெஞ்சுக்காரர்கள் / இடதுசாரிகள். மாவோ செய்வது சரியில்லையென்கிறார்கள். யூரோகம் யூனிசம் பரவாயில்லையென்கிறார்கள், கறுப்பன் அதிகம் கேட்கிறான் என்கிறார்கள்.

அன்டா கப்பல் நகர மௌரியை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறாள். மௌரி படிகளில் முகம் கவிழ அமர்ந்திருக்கிறான். துறைமுகத்துள்ளிருந்து வாகனங்கள் வர பரபரப்பான காலை அது. வேகம். மாடுகள் அடிமாடுகள் இழுத்துப் போகப்படுகிறது. இரும்புத் தடியால் ஓரே அடி கழுத்தில். மாடு சாய்கிறது. கழுத்து வாள்களில் அறுபட இரத்தம் ஊற்றாகப் பீச்சிடுகிறது. இரும்புக் கொக்கிகளில் மாட்டுப்பட்டு இயந்திரங்களில் வெட்டுப்பட செத்தமாட்டு உடல்கள் கன்வேயர் பெல்டில் நகர்கிறது.

படத்தின் பல்வேறு இடங்களில் ஒலிக்கும் பாடல் மறுபடி ஒலிக்கிறது: பாரீஸ்.... பாரீஸ்...பாரீஸ்... பாரீ.. .பாரரர...

4.

*ALEXANDRIA AGAIN AND ALWAYS* - அலெக்ஸான்ரியா மறுபடியும் எப்போதும் படம் எகிப்து நாட்டுப்படம். இயக்குநர் யூசுப் செய்ன் (*Youssuf Chahine*) பிரபலமான இடதுசாரி இயக்குநர். மார்க்சியவாதி. இப்படத்தில் அவரே முதிர்ந்த சினிமா இயக்குநராக நடித்திருக்கிறார்.



எகிப்திய ஜனநாயக மறுப்பை எதிர்த்தும் கருத்துச் சுதந்திரத்தை ஆதரித்தும் சினிமாக் கலைஞர்களால் நடத்தப்பட்ட ஒரு வேலை நிறுத்தம் / உண்ணாவிரதப் போராட்டத்தின்போது ஏற்பட்ட தனது சொந்த அனுபவங்களின் அடிப்படையிலான சுய சித்திரம் (bio-pic) இப்படம் என்கிறார் செயின். இப்படம் மிகச் சுதந்திரமான கனவும் கற்பனையும் என்கிறார் இயக்குநர். ஒருவர் தனது விருப்பப்படி கற்பனை செய்கிறபோது எவரும் ஒரு மனிதனை கேள்வி கேட்க முடியாது. கட்டுப்படுத்த முடியாது என்கிறார். என்னை எது சந்தோஷப்படுத்துகிறதோ அதை நான் படமாக்கினேன் என்கிறார் செயின்.

வேலை நிறுத்தம் தொடங்கி விட்டது. யாகியா (செயின்) ஒரு புகழ் வாய்ந்த சினிமா இயக்குநர். 60 வயது

இருக்கும். நதியா ஒரு நடிகை. 45 வயது இருக்கும். ஸ்டெலியோ இயக்குநரின் மகன், நடிகன். வேலைநிறுத்தம் தொடங்கிவிட்டபோது இயக்குனர் சங்கக் கட்டடத்தில் உண்ணாவிரதம் நடக்கிறது. எல்லா இயக்குநர்களும் நடிகர்களும் படப்பிடிப்பு ரத்தானதால் அங்கே வந்து முகாம் போடுகிறார்கள். சாப்பாடு, தூக்கம், குடிப்பது, சினிமா பார்ப்பது விவாதிப்பது எல்லாம் அங்கேதான்.

எகிப்தின் அரசியல் பற்றிய விமர்சனங்கள் வருகின்றது. பத்வான் அணையைக் கட்டிய நாட்டில் ஒடுக்குமுறையும் ஜனநாயக மறுப்பும் வறுமையும் இருப்பது சுட்டப்படுகிறது. அலெக்ஸான்ட்ரியாவில் மன்சைன் மக்களைப் பற்றிப் பொறுப்பற்றுக் களியாட்டம் போட்ட வேளை மக்கள் கிளர்ந்து போராடிய சம்பவங்கள் யாகியா தயாரிக்கும் ஒரு படத்தின் காட்சியாக வந்து போகிறது. ரோமியோ ஜூலியட் படத்தின் காட்சிகள் சினிமாவாக இயக்குநர்களுக்கு திரையிடப்படுகிறது. இயக்குனருக்கு நிறையக் கனவுகள். தமது மகனை ஒரு நடிகனாக்கி தனது கனவுகளை முழுமையாக்க நிறையக் கனவுகள். ஒரு படத்திற்கு சர்வதேசவிழா விருது கிடைக்கிறது. நிறைய எதிர்பார்த்து உயிரைக் கொடுத்து நடித்த படம் விருது பெறாமல் போகிறது. மகன் மனமுடைந்து போகிறான். மகனது துக்கம் தந்தையின் வேதனை. மகன் விலகிப்போய் வணிகரீதியிலான படங்களில் நடிக்கிறான். வேலை நிறுத்தத்தை உடைக்க அரசு தயாரிக்கும் டாக்கிமென்டரியிலும் நடிக்கிறான். தந்தைக்கும் தனயனுக்கும் உயிர்உறவில் பதட்டம், இயக்குநருக்கும் நடிகனுக்கும் புறவுலகத் தாக்கங்களால் போராட்டம்.



செயின் தன்னளவில் மாபெரும் ஆளுமை. தீவிரமான அரசியல் பிரக்ஞை உள்ளவர். கலைக்கான கற்பனை உணர்வுள்ளவர். படிப்பாளி. அன்பான தகப்பன். சாகாவரம்பெற்ற சிருஷ்டிகளை உருவாக்கிய படைப்பாளி. நிறைவேறாத தாகங்களை, எதிர்பார்ப்புகளை, கனவுகளை கொண்டவர்.

கிளியோபாட்ரா யூலியஸ் ஸீசரைப் புறக்கணிப்பவளாக அவர் சித்தரித்திருக்கிறார். காதல் அர்த்தமற்றது என்பதை நிருபிப்பது அவர் நோக்கம். நதியா மறுதலிக்கிறாள். அவர்களுக்கிடையில் கண்ணாமூச்சி விளையாட்டு. அவளது வெற்றுப் பாதங்கள், அவளை, அவர் கனவுப் படத்தின் கதாநாயகியாக்கும் வண்ணம் அழகானவை. அவரை உறுத்துபவை அவளின் வெண்மையான அழகான வெற்றுப் பாதங்கள். கிளியோபாட்ரா ஸீசரை இழந்த வேதனையில் பாம்பை இதழ்களில் கடிக்கவிட்டு இறப்பதே அவளின் காதல் உன்னதம் என்கிறாள் நதியா. அவருக்கு அவள் கனவு. அவரது படங்களில் வரும் நிறைவேறாத கனவு. தனது கனவுகளை நிறைவேற்ற ஒரு பிரதியீடு. தான் பிரதியீடாக இருக்க அவளுக்கு விருப்பமில்லை. இந்த அன்பான சுதந்திர தாகமுள்ள கனவு மயமான மனிதனை அவள் நிஜத்தில் நேசிக்கிறாள்.

ஒரு வயது முதிர்ந்த குண்டான நடிகைதான் உண்ணாவிரதம் இருக்கிறாள். செயின் அவளுக்கு விருப்பமான மனிதன். அவள் உண்ணா நோன்பிருக்க அடுத்த அறையில் பிறர் குடித்துக் கும்மாளமிட்டு மாமிசம் உண்பது செயினுக்குச் சம்மதமில்லை. சாப்பிடுவதையே மறுக்கிறார். நிறையச் சிகரெட் குடிக்கிறார். அரசுக்கும் இயக்குநர் சாப்கத்துக்கும் பேச்சுவார்த்தை நடக்கிறது. வெளியே சங்கத்திற்கு முன் ராணுவம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

அமைதியற்ற மனம் செயினுடையது. அவருக்கு மனைவியுமுண்டு, பொறுப்பான மனைவி. ஆயினும் மன இணக்கமும் அன்பும் ஓரேயொரு மனிதனோடு நின்றுவிடுவதில்லை. மனஒருமை மரபுகளை உடைத்து விடுகிறது. அன்பு கிளைவிடுவதற்கு பரிதாபமொன்றே போதும். நதியா, செயின் இடையிலான மௌன யுத்தம் முடிவுக்கு வருகிறது. தற்காலிகமானதென்றே நினைக்க முடியும்.

அரசுக்கும் இயக்குநர் சங்கத்திற்கும் உடன்பாடு ஏற்படுகிறது. எல்லோரும் கிளம்புகிறார்கள். செயின் விடைபெறுகிறார். தனிமையில் நதியா சொல்கிறாள்: 'உங்கள் கனவுகளுக்கு என்னை பிரதியீடு ஆக்காதீர்கள், please' எனக் கண்ணீரோடு கரைகிறாள்.

ஒப்பந்தம் கைச்சாத்தான காட்சி படம் பிடிக்கப்படுகிறது. அதற்கு செயின்தான் இயக்குநர். முழு மண்டபம் திரையில் கமராவில் தெரிய வேண்டும். இயக்குநர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள். சிற்சில இடங்களில் கமரா தேடிச் சென்று குளோசப் வேண்டுமென்கிறார் செயின். கமராமென் சொல்லிக்கொள்கிறான்: செயினுக்குப் பைத்தியம். இதற்கு எதற்கு குளோசப் ஷொட்? காமராவை செயினே பொறுப்பேற்கிறார்.

கூட்டத்தில் நதியாவைத் தேடி காமரா நகர்கிறது. அதோ நதியா. அமைதியான பூச்சற்ற அன்பான அழகேயுருவான நதியா. காமரா நதியாவின் விழிகளில் நிலைக்கிறது. செயின் அதை விட்டுவிட்டு பல்கனிக்கு முன்னோக்கி வருகிறார். நதியாவும் அவரை வெறித்தபடி நிலைத்த விழிகளோடு நகர்கிறாள்....

1982ஆம் ஆண்டு ஜனநாயகத்திற்கான வேலைநிறுத்தத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கு படம் சமர்ப்பிக்கப்படுகிறது.

## III. போராட்டம் பற்றிய மூன்று படங்கள்

*YEARS OF THE BRAZIER* அல்ஜீரிய நாட்டு படம்.

1939ஆம் ஆண்டிலிருந்து 1954ஆம் ஆண்டுவரை பிரெஞ்சுக் காலனியாதியத்திற்கெதிரான அல்ஜீரிய மக்களின் எழுச்சியைச் சொல்லும் படம். இப்படத்தின் இயக்குநர் லத்தர் ஹமினா ரஷ்ய இயக்குநர் அலெக்ஸான்டர் டவ் ஸங்கோவின் காவிய நயமான திரைப்படப் பாணியோடு சேர்த்துப் பேசப்படுபவர்.

படம் அல்ஜீரியாவில் வரண்ட விவசாயக் கிராமமொன்றில் நிகழ்கிறது. இரண்டு பிரிவுகளாகப் பிரிந்த பக்கத்துப் பக்கத்துக் கிராம மக்கள். எப்போதுமே அவர்களுக்கிடையில் தண்ணீருக்காகச் சண்டை. மழை பெய்தால் அவர்களுக்குச் சந்தோஷம். அப்போது ஆற்றில் மழைத் தண்ணீர் வரும். அப்போது சண்டைகளற்று சந்தோஷமாயிருப்பர். வரட்சி தொடங்கியவுடன் மறுபடி சச்சரவுகள் ஆரம்பித்து விடும்.

இந்த வரட்சியிலிருந்து மீள்வதற்காக நிறையப் பேர் நகரம் நோக்கிப் போகிறார்கள். அவர்களில் ஒருவனாக, மனைவி மூன்று பிள்ளைகளோடு தனது உறவினரைத் தேடிப் போகிறான் கதையின் நாயகன். நகரம் உயர்ந்த கட்டிடங்களை ஜனநெருக்கடியைக் கொண்டிருக்கிறது. இடிந்த குட்டிச்சுவர்களுக்கடியில்தான் குடியேறியவர்கள் வாழ்கிறார்கள். பக்கத்து வேலைகளில் கல்லுடைக்கும் வேலைதான் ஜீவிதம்.

கல்லுடைக்கும் வேலையில் ஈடுபடும்போது சாப்பிட நினைக்கிறான் நாயகன். பிரெஞ்சு முதலாளி சாப்பாட்டில் கற்களைப் போடுகிறான். அவனை அடித்துவிட்டு ஜெயிலுக்குப் போய் ரணங்களுடன் வெளியே வருகிறான் விவசாயி.

இரண்டாம் உலகப் போர் துவங்குகிறது. அல்ஜீரியர்கள் ஜெர்மனியோடு போர் புரிவதற்காகப் பிடித்துப் போகப்படுகிறார்கள். போர் முடிந்து திரும்பும் அல்ஜீரியர்கள்

மறுபடியும் அடிமைகளாக்கப்படுகிறார்கள். தன் கிராமத் திற்குத் திரும்புகிறான் நாயகன். ஊர் வெறிச்சோடிக் கிடக் கிறது. ஊர்ச்சதுக்கத்தில் கூட்டப்பட்ட முழு ஊர்மக்களும் பிரெஞ்சு ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சேதி வருகிறது. அவனுக்கு அவன் குழந்தை மட்டுமே மிஞ்சு கிறான். செல்ல மகன்.

அவனது முந்தைய வாழ்வு பிரெஞ்சு அரசாங்கத்தின் பாரபட்சமும் கொடுமையும் கொண்ட் அனுபவங்கள் நிறைந்தது. தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க நதியின் குறு க்கே கட்டப்பட்டிருந்த அணையை வெடிகுண்டு வைத்து உடைத்து சிறைக்குப் போகிறான். தான் அடைக்கலம் கொண்ட நகரத்தில் மலேரியா பரவும்போது கிராமத்தில் அடைக்கப்பட்ட மக்கள் முழுக்க மரணமடைகிறார்கள். தனது மனைவி இரு குழந்தைகள் சொந்தம் என அனைத் தையும் சாகக் கொடுக்கிறான். பிரெஞ்சுக்காரர்கள் பத்தி ரமாகக் கிராமத்திலிருந்து வெளியேறுகிறார்கள். மக்கள் இறந்ததும் நோய் கட்டுப்படுத்தப்பட்டு மறுபடி ஊர் திரும் புகிறார்கள் அவர்கள். தன் குழந்தையை தன் சொந்தக் கிராமத்தில் விட்டுப் போருக்குப் போனவன் திரும்பி வந்து சந்திப்பது தனது மகனை மட்டுமேதான்.

தன் மகனோடு நகரத்திற்கு வந்து இரும்புப் பட் டறையொன்றில் வேலை செய்கிறான் நாயகன். அந்நகரத்தில் அரசியல் விழிப்புணர்ச்சியிருக்கின்றது. பிரெஞ் சுத் தேர்தலில் நம்பிக்கையுள்ள அர சியல் காட்சி அங்கு இருக்கிறது. மிக விரைவில் தேர்தலும் நடக்கவிருக் கிறது. அக் கட்சியின் வேட்பாளர் அங்கு வருகைதந்திருக்கிறார். பிரெ ஞ்சு அரசின் கட்சி வேட்பாளரும் வரவிருக்கிறார்.



இச்சூழலில் ஒரு அந்நியன் அந்த ஊருக்கு வருகை தருகிறான். தினம் தினம் போலீஸ் நிலையத்திற்கு போய் விட்டு வருகிறான். யார் இவன்? இவன் அரசாங்கத்தின் கை யாளா? விசாரித்துப் பார்க்கும் போது அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கத்தின் உறுப் பினர் அவர் என்று தெரிகிறது. அவர்மீது இருக்கும் வழக் கொன்றிற்காக ஊர் கடத்தப்பட்டிருக்கும் அவர் அக்கிராம போலீஸ் நிலையத்தில் தினசரி கையெழுத்துப் போட வேண்டும். அவர் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை யுள்ளவர். ஆயுதப் போராட்டம் மட்டுமே பிரெஞ்சுக் காலனியத்தை விரட்டும் என்கிறார். சமரச அரசியல் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படும் என்கிறார். அவர் அரசியலுக்காக நையப்புடைக்கப்பட்டு போலீஸ் நிலை யத்திலிருந்து வெளியே வீசப்படுகிறார். நமது நாயகன் காப்பாற்றுகிறான்.

தேர்தலில் நம்பிக்கையுள்ள கட்சி வேட்பாளர் வந்து கூட்டம் போடுகிறார். கூட்டத்திற்குப் போகும் விடுதலை அமைப்பைச் சேர்ந்த சமரச அரசியல் பயனில்லை என் கிறார். கூட்டம் முடிந்து வெளியே வரும் கட்சித் தலை வரின் பாஸ்போட் அத்தாட்சிப் பத்திரங்கள் விசாரணை க்காகப் பறிக்கப்படுகிறது. பொதுக் கூட்டமோ ஊர்வலமோ நடக்கக் கூடாது என மிரட்டப்படுகிறார்.

அதேவேளை பிரெஞ்சு வெள்ளை ஆளும் கட்சியின் வேட்பாளர் அல்ஜீரியர் போல உடையணிந்து வந்து மக் களைத் தீண்டத் தகாதவர்களாக விலக்கிப் பொதுக் கூட் டம்போட்டு வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டி ருக்கிறார். அது ஒரு சதுக்கம். பிரெஞ்சு ராணுவம் நிறைந் திருக்கிறது. தேர்தல் கட்சித் தலைவரும் விடுதலை அமை ப்பைச் சேர்ந்தவரும் அல்ஜீரியரும் ஒன்றாகச் சேர்ந்து சதுக்கத்திற்கு ஊர்வலமாக வருகிறார்கள். செய்தி அரசு அலுவலகத்திற்குப் போகிறது. ஊர்வலத்தை சதுக்கத்திற்கு உள்ளே விடுகிறார்கள். தேர்தல் கட்சித் தலைவர் தனக்கு மக்களிடம் பேச உரிமை வேண்டும் என்கிறார். ராணுவம் நாற்புறங்களிலும் குதிரை துப்பாக்கிகளுடன் தோன்றுகிறது. தலைவரின் நெற்றிப் பொட்டைத் துப்பாக்கி ரவை துளை க்கிறது. தொடர்ந்து குண்டுகள் சரமாரியாக வருகிறது. வாள்களும் துப்பாக்கிகளும் ஏந்திய குதிரைப் படைகள் அல்ஜீரிய மக்களை வெட்டிக் குவிக்கின்றனர். சில அல்ஜீரி யர்கள் வாள்களை தாம் பிடுங்கி பிரெஞ்சு ராணுவத் தினரை வெட்டிக் குவிக்கின்றனர். குதிரையின் குளம் படிகள், சாவோலம், உடல்கள், துப்பாக்கிச் சத்தம், வாள் வீசும் ஓசை,அல்ஜீரியாவின் ஜாலியன் வாலாபாக் அக்காட்சி.

நாயகனும் இன்னும் சில தோழர்களும் தப்பிப் பிழைக் கிறார்கள். தலைமறைவாகி மலைப் பிரதேசத்திற்குப் போகிறார்கள். கெரில்லாக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. கெரில்லாப் போராட்டம் தொடங்கி விட்டது. குழந்தை தகப்பனைத் தேடிப் போகிறது. தகப்பன் இருக்கும் இடம் தெரிந்து அங்கே போக அந்த இடம் முழுக்க இரத்தக் கறைகள். அங்கங்கே ரவை துளைத்து இடிந்துபோன சுவர்கள். கொழுந்து விட்டெரியும் தீப்பிழம்பு.

அவன் தந்தை தன் தோழர்களைப் பாதுகாக்கும்போது பிரெஞ்சு ராணுவத்துடனான ஒரு துப்பாக்கிச் சூட்டில் சுடப்பட்டு இறந்து விட்டான். அவன் தந்தை அவனுக்கு ஆதர்ஸம். அவன் கடமையை மேலெடுத்துச் செல்ல வேண்டும்.

இக்கதை முழுக்கவும் மனம் பேதலித்த ஒரு மனிதனின் பாத்திரம் வருகிறது. கதையின் பல்வேறு கண்ணிகளை இணைப்பவர் அவரே. அவரது பெரும்பாலான இருப்பிடம் கல்லறைதான். போராட்டத்திற்கும் சாவுக்கும் நம்பிக்கைக்கும் அவரே சாட்சி. வரலாற்றைச் சொல்லிக் கொண்டு போகும் கதை சொல்லி அவன். அவன்தான் இக்குழந்தையின் தோழன். கதை சொல்லியைத் தேடிப் போகிறான் குழந்தை. கல் லறையில் தேடிக்கண்டு பிடித்தபோது ஏற்கனவே இறந்தி ருக்கிறான் அவன்.

குழந்தை மலைகளில் ஓடிக்கொண்டேயிருக்கிறான்....

2. SHAIHU UMAR நைஜீரியா நாட்டைச் சேர்ந்த படம். நைஜீரியப் பிரதமராக இருந்த அபூபக்கர் தபாவா பெலேவா எழுதிய நாவலின் திரைவடிவம். 1955இல் வெளி யான நாவலும் இதே பெயரைக் கொண்டது.

இப்படத்தின் கதை 1900ஆம் ஆண்டளவில் நடைபெற்ற அடிமை வியாபாரத்தை விவரித்துச் சொல்வது. ஸைகு உமர் தந்தையால் கைவிடப்பட்டு தாயோடு வாழ்ந்து வரு கிறான். பூர்வீக ஆபிரிக்கத் தெய்வ வழிபாட்டைக் கொண்ட கிராமம் அவர்களுடையது. அக்கிராமத்தைச் சூறையாடத் திட்டமிடுகிறார்கள் பக்கத்திலிருக்கும் இமாம் தலைமையிலான முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த கிராமத்தினர். ஒரு நள்ளிரவில் அக்கிராமத்தவர்கள் தமது சொந்தக் கடவுளைச் சுற்றி நடனமாடிக் கொண்டிருக்கையில் அந்த ஊரைத் தாக்கிக் குடிசைகளைத் தீயிட்டு உடைமைகளைக் கொள்ளையடித்து அங்கிருப்பவர்களை அடிமைகளாகப் பிடித்துப் போகிறார்கள்.


பிடித்து வரப்படும் அக்குழந்தை அக்கிராமத்தில் குழந்தையற்ற தம்பதியிடம் வளர்கிறான். அங்கு வரும் எகிப்திய அடிமை வியாபாரியொருவன் தனக்குக் குழந்தை யில்லையென்றும் இச்சிறுவனை எனக்குப் பிடிக்கிறது தாருங்கள் என்று கேட்கிறான். அதன்படி அச்சிறுவனை ஒட்டகத்தின் மேலேற்றிக்கொண்டு எகிப்தியப் பாலை

வனத்தில் கெய்ரோ நோக்கிப் பயணம் நடக்கிறது. ஒட்டகத்தின் பின், கால்களும் கைகளும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட கறுப்பு ஆபிரிக்க அடிமைகள் நடந்து வருகிறார்கள்.

எகிப்துக்கு வரும் சிறுவன் உமர் அராபிய மொழி படிக்கிறான். குரானைக் கரைத்துக் குடிக்கிறான். மிகப் பெரிய அராபிய மொழிப் பண்டிதனாகவும் குரானில் மேதையாகவும் ஆகிவிடுகிறான். அவன் சீடப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவும் தொடங்குகிறான். ஆயினும் அவனுக்குத் தன் தாயை மறக்க முடியவில்லை. தன்னைத் தேடி வந்த தன் தாயை அடிமை வியாபாரிகள் வாங்கிச் சங்கிலியில் பிணைத்து பாலைவனத்தில் நடத்திவரப்படுவதாக அடிக்கடி கனவு காண்கிறான்.

ஒருமுறை தன் எஜமானனிடம் சென்று தன் தாயைக் காணவேண்டும் என்கிறான். எதற்கும் பிறிதொரு நகரத்திலிருக்கும் அடிமை வியாபாரியைக் கலந்துகொண்டு பயணத்தைத் தொடரலாம் என்கிறான் எஜமானன். அவனைத் தேடிப் போகிறார்கள் உமரும் எஜமானனும். அவன் வீட்டு முற்றத்தில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நிறைய ஆபிரிக்கப் பெண்கள் இருக்கிறார்கள்.

வீட்டுக்குள் சென்று விபரம் கேட்டறிந்த வியாபாரி பயணத்தை தான் ஒழுங்கு செய்வதாகச் சொல்கிறான். எதற்கும் அந்த ஊர் விபரங்களை தன்னிடமிருக்கும் ஒரு அடிமை முதாட்டியிடம் கேட்கலாம் என்கிறான். அவள் தனக்கு ஒரு பயனற்ற அடிமை என்கிறான். அடிமை முதாட்டி கூட்டி வரப்படுகிறாள். அவள்தான் உமரின் தாய். உண்மையிலேயே அடிமையாகிவிட்ட தாய். தனது கனவில் வந்த தான் தேடித் தேடித் திரிந்த தாய் அவள்தான்.



தம் சொந்த மக்களையே அடிமைகளாக விற்ற ஆபிரிக்கர்கள், ஒட்டகங்களில் அசைந்தபடி அமர்ந்து போகும் இமாம்கருகில் பின்னால் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு கழுத்தில் இறுக்கப்பட்ட இரும்புப் பட்டைகளோடு நகரும் ஆபிரிக்கப் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் ஆபிரிக்காவின் வரலாற்றின் பக்கங்கள் புரண்டு கொண்டிருக்கின்றன.....

3. *THE NIGHT OF COUNTING THE YEARS* ஆண்டுகளை எண்ணிக்கொண்டிந்த இரவு - எகிப்திய திரைப்படம்.

பிரமிட்டுகளும் முதுமக்கள் தாழிகளும் மலைக்குன்றுகளும் நதிப்படுகையும் பிரமாண்டமான சிலைகளும் உயர்ந்த கற்கட்டடங்களும் நிறைந்த பின்னணியில் நகரும் படம். திகிலும் துயரமும் சேர்ந்ததொரு படம்.

எகிப்தில் விவசாயமும் கால்நடையும் செய்து ஜீவித்து வந்த ஒரு இனக்குழு. விவசாயம் செய்யமுடியாத நிலைமை உருவாகிறது. அவர்கள் ஜீவனத்திற்காக வழிவழியாக கல்லறைத் திருட்டை மேற்கொள்ளுவார்கள். தமது பரம்பரையில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இறந்த முதாதையரின் முதுமக்கள் தாழிகளிலிருந்து நகைகளை எடுத்து வித்து ஜீவித்து வருகிறார்கள்.

கெய்ரோவில் அகழ்வாராச்சியில் ஈடுபடுபவர்களுக்கு சில வம்சங்களைப் பற்றிய விபரங்கள் இன்னும் அவிழ்க்கப்படாத மர்மங்களாகவே இருந்து வருகின்றன. இச்சூழலில் முதுமக்கள் தாழிகளிலிருந்து நுட்பமான ஆபரணங்கள் திருட்டுத்தனமாக விற்கப்படுவதும் அரசுக்குத் தெரிய வருகிறது. இவைகளைப் பற்றி ஆய்வதற்காக ஒரு கூட்டம் நடைபெறுகிறது. இந்தத் திருட்டு அரசு விடுமுறை மாதங்களில் கண்காணிப்பு இல்லாத போதுதான் அதிகமாக நடைபெறுகிறது என கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆகவே அந்த நாட்களிலேயே அதைக் கண்டுபிடிக்க அங்கு செல்ல முன்வருகிறார் ஒரு அதிகாரி. பரிந்துறை ஒப்புக்கொள்ளப்படுகிறது.

பரம்பரை பரம்பரையாக இந்தத் திருட்டு ஒரு பரம்பரை ரகசியமாக இருக்கிறது. அந்த இனத்தில் ஒருவர் மரணமாகிறார். அவருக்கு இரு வாரிசுகள். ஒருவன் பெயர் வனிஸ் (*Wannis*). அவர்தான் கதையின் மையமான பாத்திரம். அவருக்கு முதன்முதலாக அந்த ரகசியம் தெரிவிக்கப்படுகிறது. மலையிலிருந்து கயிற்றின் மூலம் குகையில் இறங்கி முதுமக்கள் தாழிகளிலிருந்து எலும்புக் கூடுகளைக் கலைத்து நகைகளை எடுத்து விற்க வேண்டும். வனிஸுக்குத் தன் முதாதையரின் இறந்த உடல்களின் மௌனத்தை அமைதியைக் கலைப்பதில் சம்மதமில்லை. அவன் மறுக்கிறான். அவனது மூத்த சகோதரன் தகப்பனின் பேராசை பற்றி சகோதரர்களை சொல்கிறார்கள். இரண்டு வியாபாரிகள் அங்கு வருகிறார்கள். ஒருவன் வியாபாரியின் பழைய கையாள். இப்போது அவனே வியாபாரம் செய்து காசு சம்பாதிக்க ஆசை. உடன் இரண்டு பெண்களையும் கூட்டி வருகிறான்.பெண்களைக் காட்டி விபச்சாரம் செய்து ஆட்களை மயக்கி திருட்டு நகைகள் வாங்குவது அவன் திட்டம். வனிஸ் தவிர அவன் பெரியப்பா, சித்தப்பா, அவர்கள் குழந்தைகள் எல்லோருமே இதற்குப் பலியாகிறார்கள். வனிஸ் வன்மையாக மறுத்து விடுகிறான். அதற்காக அவன் வன்முறைக்கு ஆளாகிறான்.

பிரதானமான வியாபாரியிடம் திருடிய பொருளை விற்க, அங்கே வரும் வனிஸ் அதைப் பிடுங்கிக் கொள்கிறான். நைச்சியமாகப் பேசி காரியமாகாத வியாபாரி வானிஸை அடித்துப் போட்டுவிட்டுப் போய் விடுகிறான்.

வனிஸுக்கு இனி ஒரேயொரு வழிதானிருக்கிறது. அங்குவந்து முகாமிட்டிருக்கும் அதிகாரியிடம் எல்லா வற்றையும் சொல்லிவிடுவது. அதிகாரியைச் சந்தித்து எல்லாமும் வெளிப்பட நள்ளிரவில் குகைக்குள் இறங்குகிறார்கள் அகழ்வாராச்சியாளர்கள். தாங்கள் கண்டுபிடிக்க வந்தது 4ஆம் வம்சம் பற்றித்தான். தாங்கள் இங்கே காணாமல் போன வேறு பல வம்சங்களைக் கண்டு பிடித்து விட்டோமென்கிறார் அதிகாரி.

என்ன திட்டம்? விடிவதற்குள் நதிமூலம் கெய்ரோவுக்கு முதுமக்கள் தாழிகளை அகற்றிக்கொண்டு போய்விடுவதென முடிவாகிறது. குதிரையில் ராணுவ வீரர்கள் சுற்றிலும் மலைமீது பாதுகாப்பாக நிற்கிறார்கள். கயிறுகளின் மூலம் பத்திரமாக தாழிகள் மேலேயேற்றப்பட்டு ஜாக்கிரதையாக முடப்பட்டு நான்கு நான்கு பேர்களாகத் தூக்கிச் செல்ல, அந்த இருளில் முதுமக்களின் மறுபயணம் வரிசையாக கெய்ரோ நோக்கித் தொடங்குகிறது. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

இவர்களைத் தாக்குவது என்ற திட்டத்தோடு ஒளிந்து வருகிறார்கள், திருட்டுத் தொழில் செய்தவர்கள். செத்த உடல்கள் தரும் சாப்பாடு எமக்கு வேண்டாம் என மறுத்து விலக்குகின்றனர் பெரும்பாலானோர். எவரும் தாக்குதலுக்குத் தயாராயில்லை.

தமது சொந்தங்களைப் பிரியும் காக்கைக் கூட்டம்போல் கும்பல் கும்பலாக தாழிகளின் பின்னாலே ஓடிக்கொண்டிருக்கிறது, தலை முதல் கால்வரை முடிய பெண்களின் கூட்டம்.

வனிஸ் நிலைகொள்ளாமல் தவிக்கிறான். ஒருபக்கம் தமது முதாதையரின் கலையாத மௌனத்தைக் காப்பாற்றிவிட்ட விடுதலை எண்ணம். மறுபுறம் தமது ஆயிரமாயிரம் ஆண்டு சொந்தங்கள் பெயர்த்துக்கொண்டு

போகப்படுவது தொடர்பான துயரம்.

காவியத்தன்மை வாய்ந்தவை படத்தின் இறுதி நேரக் காட்சிகள்.

## IV. மூன்று குழந்தைகள் படங்கள்

YAABA படம் பர்கினோ பாசோ நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் படம். நட்ரிஸா செம்பேன், ஜெரீமா போன்ற வர்களோடு ஞாபகம் கொள்ளப்படுவர். இப்படம்தான் இன்றுவரை அதிகமான வெளிநாடுகளில் விற்பனையான ஆப்பிரிக்கப் படம்.

முதல் காட்சியில் ஒளிந்து விளையாடும் சிறுவன் பிலாவும் சிறுமி நொபுகோவும் இறுதிக் காட்சியிலும் ஒளிந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பிலாவும் நொபுகோவும் நண்பர்கள். இருவரும் ஒரு கிராமத்தின் அண்டை வீட்டுக்காரர்கள். இரண்டு பேரும் சேர்ந்து நதியில் தண்ணீர் எடுக்கப் போவார்கள். விளையாடப் போவார்கள்.

இந்த இரண்டு குழந்தைகளுக்கும், கிராமத்திலிருந்து சூனியக்காரி என்று குற்றம் சுமத்தப்பட்டு ஒதுக்கிவைக்கப் பட்ட முதாட்டிக்குமிடையேயான அன்பான உறவுதான் கதை. எப்போதுமே பிலாவுக்கு பாட்டியின் மீது அன்பு. ஆம். அவனைப் பொறுத்தளவும் முதாட்டி பாட்டிதான். அம்முதாட்டியைக் கிராமத்துப் பையன்கள் கல்லெறிந்து காயப்படுத்துகிறார்கள். பிலாவுக்கும் அவர்களுக்கும் தகராறு வருகிறது. நொபுகோ இடையில் புகுந்து விலக்கி விடுகிறாள்.



பாட்டி உண்மையில் எல்லாக் கலாசாரங்களிலும் ஞானி. அனுபவம் அவளது மௌனத்திற்கு நீண்ட ஆழ்ந்த அர்த்தத்தைத் தருகிறது. பதேர் பாஞ்சாலி பாட்டி.3000 ஆண்டு அறுவடை பாட்டி. யாபா படத்தின் பாட்டி எல்லோருமே இருபதாம் நூற்றாண்டு சினிமாவின் அமர சிருஷ்டிகள். பாட்டி ஏன் கிராமத்திலிருந்து சூனியக்காரி என விலக்கப்பட்டாள். பாட்டி சிறு குழந்தையகப் பிறந்தவுடனேயே தாய் தந்தையை இழந்து விட்டாள். தாய் தந்தையரைக் காவு வாங்கிய துஷ்டக் குழந்தைதான் பாட்டி. The City Of God படத்தில் கணவன் காணாமல் போய்விட்டதால் சூனியக்காரி எனக் குற்றம் சாட்டப்பட்டு பெண்ணின் குடிசை கிராமவாசிகளால் தீ வைத்துக் கொழுத்தப்படுகிறது. ஆணாதிக்கத்தின் கொடுமை இன்னும் ஆபிரிக்கக் கிராமப் புறங்களில் நிலவி வருவதாகச் சொல்கிறது, சமீபத்தில் சூனியக்காரிகள் தொடர்பாக நான் பார்த்ததொரு விவரணப் படம்.

அக்கிராமத்தில் ஒரு குடிகாரன். அவனுக்கு ஒரு இளம் மனைவி. அவளுக்கு ஏற்கனவே ஒரு காதலன் உண்டு. குடித்துவிட்டு வரும் கணவன் சோர்ந்து வந்து உறங்கி விடுகிறான். அவளது திருப்தியற்ற காதலுணர்வு இரவில் தன் காதலனைச் சந்திக்க ஊர்க்கோடி பற்றைகளைத் தேடிப் போகிறது. இதை ஒருமுறை பார்த்து விட்ட பிலா பாட்டியிடம் சொல்ல, பாட்டி சொல்கிறாள்: 'அதற்கு அவளுக்குக் காரணம் இருக்கும்'.

பிலாவும் நொபுகோவும் ஒருமுறை நீர்மொண்டு வரப் போய் விளையாடி விட்டுத் திரும்பி வரும்போது முன் பொருமுறை பாட்டியைக் கல்லால் அடித்த கும்பலின் கூட்டம் பிலாவைக் கத்தியால் குத்த வருகிறது. பிலாவும் அவர்களும் சேர்ந்து புரளும்போது இடையில் வரும் நொபுகோவின் கையில் கத்தி குத்தி விடுகிறது. அதைப் பெரிதாகக் கவனியாமல் விட்டு விடுகிறாள் நொபுகோ. திருட்டுத்தனமாகக் கறந்த பாலைக்கொண்டு பாட்டிக்குத் தருகிறான் பிலோ. அவனைப் பேரனே என்று உச்சி மோர்கிறாள் பாட்டி. நாட்கள் நடக்க நொபுகோவின் கத்தியின் காயம் கவனிக்கப்படாததால் படுத்த படுக்கையாகிறாள். நீண்ட நாட்களாக அவள் எழுப்பவே யில்லை. பெற்றோருக்கும் ஊராருக்கும் கவலை பிடிக்கிறது.

மாந்திரீகன் வரவழைக்கப்படுகிறான். வந்தவன் கோழி கேட்கிறான், தானியம் கேட்கிறான். காசு கேட்கிறான், கடைசியில் சூனியக்காரக் கிழவிதான் காரணமென அவளை விரட்டச் சொல்கிறான். கிராமம் அவள் குடிசைக்குத் தீ வைக்க முடிவு செய்கிறது. பிலா பாட்டிக்குச் சொல்ல, பாட்டி குடிசையை விட்டு வெளியேறுகிறாள். குடிசை கொழுத்தப்படுகிறது.

பிலாவுக்கு நொபுகோவின் சுகயீனத்திற்கு காரணம் தெரியும். பாட்டியை உதவச் சொல்லிக் கேட்கிறான். பிலாவைக் கூட்டிக்கொண்டு பாட்டி கிராம வைத்தியனைத் தேடிப் போகிறாள். பிலாவின் அப்பா, பிலாவை விரட்டிப் பிடித்து பாட்டி கண்டிப்பாக சூனியக்காரியே என்கிறான்.

தேடிப்போன பாட்டி கிராமத்து வைத்தியனைச் சந்திக் கிறாள். வைத்தியன் பாட்டிக்கு குடிக்க நீர் கொடுத்து, சாப்பிடச் செய்து, மூலிகைகளைச் சேகரித்துக்கொண்டு நொபுகோ வீட்டிற்கு வருகிறான். நொபுகோ வீட்டார் விரட்டி அடிக்கின்றனர். நொபுகோ சுகயீனத்திற்கான காரணம் சூனியக்காரிதான் என்கிறார்கள்.

பிலாவின் தாய்க்கு பிலாவை நொபுகோவை அவர்கள் அன்புப் பாட்டியைத் தெரியும். பிலாவை அனுப்பி கிராமிய வைத்தியனிடம் மருந்து வாங்கிவரச் செய்து நொபுகோவுக்கு ரகசியமாகக் கொடுக்கிறார்கள். நொபுகோ கொஞ்ச நாளில் சுகமடைந்து பிலாவுடன் விளையாடப் போகிறாள்.

பாட்டி எங்கே? பாட்டி என்ன ஆனாள்? பாட்டிக்கு நன்றியாக அன்பளிப்புத் தர பிலாவும் நொபுகோவும் பாட்டியைத் தேடிப் போகிறார்கள். பாட்டி ஒரு இடிந்த மண்குடிசையின் சுவரில் சாய்ந்து அமர்ந்திருக்கிறாள். பிலா பாட்டியின் அருகே பேசிக்கொண்டே போய் பாட்டியின் தோளைத் தொடுகிறான். பாட்டி இறந்துவிட்டாள். யாருமே சொந்தம் பாராட்ட இயலாத அநாதையாகவே அவன் பாட்டி இறந்து விட்டாள்.

நொபுகோ கொண்டுவந்த உணவுப் பொட்டலத்தைக் கீழே போட்டுவிட்டு பயந்தபடியே சத்தமிட்டபடி கிராமத்திற்கு ஓடுகிறாள். குடிகார கிராமவாசி மட்டுமே வருகிறான். மூவரும் சேர்ந்து குழிவெட்டிப் பாட்டியைப் புதைக்கிறார்கள். புதைத்துவிட்டு அருகிலிருந்த குளத்தில் குளித்துக் கரையேறுகிறார்கள்.

பாட்டிக்கும் அவனுக்கும் மட்டுமே பிரியமான சின்ன ஞ்சிறு பொம்மையை பந்தயமாக வைத்து பிலாவும் நொபுக்கோவும் ஒளித்துப் பிடித்து விளையாட தீர்மானிக்கிறார்கள். நொபுகோ முன்னே ஓட பிலா துரத்திக் கொண்டு பின்னே ஓடுகிறாள்.....

2 WEND GUNI / THE GIFT OF GOD / கடவுளின் வரம் - படம் பர்க்கின பாஸோ நாட்டைச் சேர்ந்த படம். இதுவும் குழந்தைகள் உலகுபற்றிய படம்.

வெண்ட்குனி சிறுவனின் பெயர். சிறுவன் ஒரு அநாதைக் குழந்தை. இது ஒரு நாடோடிக் கதை. ஒரு ஊரில் தாயும் தகப்பனும் குழந்தையும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள். தந்தை வேட்டைக்குப் போனவன் பல

வருடங்களாகத் திரும்பி வரவில்லை. கிராமத்துக்காரர்கள் அவளைச் சூனியக்காரியென்கிறார்கள். ஊரைவிட்டு ஓடிப்போ என்று குடிசைக்குத் தீ வைக்கிறார்கள். தப்பிப் போகும் தாயும் மகனும் மரநிழலில் தூங்க தாய் அப்படியே செத்துப் போகிறாள்.

அழுதுகொண்டே போகும் குழந்தை பசி மயக்கத்தால் ஒரு காட்டுக்குள் விழுந்து விடுகிறது. அந்த வழியே வந்த ஒரு வியாபாரி அக்குழந்தைக்குத் தண்ணீர் கொடுத்துக் காப்பாற்றிப் பக்கத்து ஊருக்கு எடுத்துப் போகிறான். தான் ரொம்பத் தூரம் போகவேண்டியவன் என்றும் ஒரு இடத்தில் தங்க மாட்டேன் என்று சொல்லி சிறுவனை அந்த ஊரில் இருக்கும் ஒரு ஆடு மேய்ப்போனிடம் வைத்துக்கொள்ளச் சொல்கிறான்.

ஆட்டுக்காரன் சரி என்கிறான். அவனுக்கும் ஆடு மேய்க்க ஒரு பையன் வேண்டும். அந்த வீட்டில் ஒரு சிறுமியும் உண்டு. சிறுவனுக்கும் சிறுமிக்கும் நல்ல சிநேகிதம். அந்த வீட்டு மனுஷிக்குப் பையன்மீது அப்படியொன்றும் அக்கறையில்லை. பையன் வாய் பேச மாட்டான், ஊமை. தன் தாய் தனக்கு முன்பே இறக்க நேர்ந்த அதிர்ச்சியில் ஊமையாகி விட்டான் அவன்.

வென்ட்குனி தினமும் காலையில் எழுந்து கூட்டிப் பெருக்கி ஆடுகளுக்குத் தண்ணீர் வைத்து மேய்ப்பதற்காக வீட்டைவிட்டுப் போய்விடுவான். அவன் முழு நேரமும் பாறைகளும் புற்களும் குன்றுகளும் ஆடுகளும் பூமியும் வானமும்தான் அவனுக்கு நண்பர்கள். அவனே மூங்கிலைச் செதுக்கிப் புல்லாங்குழல் ஒன்றும் செய்திருக்கிறான். புல்லாங்குழலை ஊதியபடி பாறைகளில் ஆடுகளைப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பான். அவன் சாப்பிடுவதோ தூங்குவதோ நமக்குத் தெரியவே தெரியாது.



அந்தப் பையனோடு தன் மகள் பழகுவது வீட்டுக்கார மனுஷிக்குப் பிடிக்காது. ஒருமுறை தன் சொந்தக்காரர்களுக்கு வெண்ணெய் கொடுத்து விடுகிறாள் வீட்டுக்காரி. சிறுமி நேரே வென்ட்குனியிடம் போகிறாள். அவன் மறந்து வைத்துவிட்டுப் போன புல்லாங்குழலைக் கொடுக்கப் போகிறாள் சிறுமி. வந்தவுடன் அம்மாவிடம் நல்ல பேச்சு அச்சிறுமிக்கு. வென்ட்குனி இதுவெல்லாம் தெரிந்தும் மௌனித்திருக்கும் ரிஷி.

அந்தக் கிராமத்தில் ஒரு ஆண்மையற்ற முதியவருக்கும் அவர் இளம் மனைவிக்கும் பிரச்சினை வந்து விடுகிறது. ஊரே சமாதானப்படுத்துகிறது. அவரோடு வாழமுடியாதெனத் திரும்பத் திரும்பச் சொல்கிறாள் இளம் பெண். வென்ட்குனியின் எஜமான் அவர்களைச் சமாதானப்படுத்துகிறான். அடுத்த நாளும் அங்கே போக, பிரச்சினை முடிந்து விட்டது, இப்போது ஒன்றுமில்லை என்கிறான் முதியவன்.

அடுத்த நாள் ஆடு மேய்க்கப்போன வென்ட்குனி ஒரு கோரத்தைப் பார்க்கிறான். இளம் பெண் மரத்தில் தூக்கில் தொங்குகிறாள். அருகில் முதியவன் இறந்து கிடக்கிறான். அலறுகிறான் குனி. எஜமான் வீட்டிற்கு ஓடுகிறான். தான் பார்த்ததைச் சொல்லுகிறான். சிறுமி சொல்லுகிறாள்: 'இனி உனக்குப் பேச்சு வந்துவிட்டது. எப்போது எப்படி வந்தது?' இந்தச் சந்தோசத்தைப் பகிர்ந்துகொள்ள யாருமேயில்லை குனிக்கு. எஜமானனுக்கோ அவன் மனைவிக்கோ அந்தக் கிராமத்திற்கோ அது ஒரு பிரச்சினையில்லை.

விடிகிறது. பாறைமீது குனி. ஆடுமாடுகள் மேயும் சப்தம். குனி புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருக்கிறான். சிறுமி வருகிறாள். எவ்வாறு அவனுக்கு ஊமை ஏற்பட்டது என்கிறாள். குனி முதல் முதலாக தனது கதையைச் சொல்கிறான். 'வீட்டுக்குப் போ, நேரமாகி விட்டது, உன் அம்மா பேசுவாள்' எனச் சொல்லிவிட்டு மறுபடி புல்லாங்குழலை வாசிக்கத் தொடங்குகிறான்.

3. YALEEN/வெளிச்சம் மாலி (Mali) நாட்டுப் படம். சுலைமான் ஸிஸோவின் இப்படம் அதன் மண்தன்மைக்காக (nativity) குறிப்பிடப்படும் படம். இப்படத்தின் கதையமைப்பும் உரையாடல்களும் செறிந்த கவித்வம் வாய்ந்தவை. வானம் பூமியை தொட்டுச் செல்பவை.

ஸோமா என்பவன் தகப்பன். நியாங்கரா இவரது மகன். பம்பாரா (Bambara) இவர்களது இனம். இந்த இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழிவழியாக சில தெய்வ சக்திகள் சித்திக்கப் பெற்றிருக்கிறது. மந்திரத்தூண் (magic post), மந்திரக் கண் (magic eye) கோரா சிறகு (wings of cora) போன்ற மந்திரச் சின்னங்கள் இப்படத்தில் முக்யத்வம் பெறுகின்றன. மந்திரசக்தி அழிவு வேலைக்குப் பயன்படுவது தாய்க்கும் மகனுக்கும் சம்மதமில்லை. ஆண்டாண்டு காலமாக இம்மந்திரசக்தி அழிவு வேலைக்குப் பயன்படுவதை, வேதனையோடு மாற்ற நினைக்கிறார்கள்.

இதில் மந்திரத்தூண் ஸோமாவிடம் இருக்கிறது. கோரா சிறகு நியாங்கராவின் தாய் மாமனிடம் இருக்கிறது. மந்திரக் கண் நியாங்கராவின் தாயிடம் இருக்கிறது. நியாங்கராவும் தாயும் அவன் தந்தையிடமிருந்து விலகி வேறொரு நாட்டுக்குப் போய் விடுகிறார்கள். ஸோமா தன் மகனைத் தேடியழிக்க போய்க் கொண்டிருக்கிறான்.

ஸோமாவின் பிரச்சினை என்ன? மந்திர சக்தியை நியாங்கராவும் அவன் தாயும் பம்பாரா இனத்திடமிருந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். அச்சக்தி இந்த இனத்தின் சொத்து. அதை விடமாட்டேன்.

நியாங்கராவின் தாய் மந்திரக்கண்ணை மகனிடம் கொடுத்து பியோல் (Feoul) நாட்டிலிருக்கும் மாமனைப் பார்த்து கோரா இறகில் இக்கண்ணைப் பொறுத்தி, அதன் சக்தியால் உன்னைக் காத்துக்கொள் என்று சொல்லிவிட்டு மகனைக் காப்பாற்ற வழிபாடு செய்யப் போய் விடுகிறாள்.

நியாங்கரா மாமனைப் போய்த் தேடும் வழியில் பியோல் மன்னனிடம் திருடன் என்ற குற்றச்சாட்டுடன் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகிறான். மன்னன் தண்டனை தரச் சொல்கிறான். அழிக்கப்போன வீரர் இருவர் நியாங்கராவின் சக்தியால் அசைய முடியாமல் போய்விடுகிறார்கள். இவ்வேளை அக்கிராமத்தைத் தாக்க வேற்று நாட்டு வீரர்கள் வந்திருக்கிறார்கள், காப்பாற்றுங்கள் மன்னரே என மக்கள் வருகிறார்கள். நியாங்கராவின் சக்தியைப் பரிசோதிக்க எண்ணுகிறார் மன்னர். குதிரையின் வலது கால் எலும்பைக் கொண்டு வரச்செய்யும் நியாங்கரா, அதை நெருப்பை வளர்த்து மந்திரம் செய்து மணல் மேட்டில் அடித்துப் புதைக்கிறான். கிராமத்தைத் தாக்கவரும் வீரர்களை எல்லையில் தேனீக்கள் கூட்டம் கூட்டமாகக் கொட்டுகிறது. சுற்றிலும் தீ எரிகிறது. படை பின்வாங்குகிறது. நியாங்கராவுக்கு நன்றி சொல்கிறார்கள்.

மன்னர் மற்றொரு உதவி கேட்கிறார். தனது கடைசி மனைவிக்குப் பிள்ளைப் பாக்கியமில்லை, உதவுங்கள் என்கிறார். ஒப்புக்கொள்ளும் நியாங்கரா ஊர்க்கோடியில் தீ வளர்த்து அப்பெண் உண்பதற்கு மருந்து தருகிறான். தானும் ஏதோ உணர்கிறான். மயக்கத்தில் பெண்ணின்

மேல்துணி நழுவி மார்புகள் வெளிப்பட நியாங்கராவுக்கு உடல் விறைத்துக் கொள்கிறது. மன்னனிடம் திரும்பும் நியாங்கரா தன்னைக் கொன்றுவிடுமாறு சொல்கிறான். தான் உண்மையிலேயே உதவ நினைத்ததாகவும் தனது ஆண்குறி தனக்கு துரோகம் செய்து விட்டதாகவும் சொல்கிறான். (My penis betrayed me). மன்னன் தன் கடைசி மனைவியை நியாங்கராவுக்கே கொடுத்து வழியனுப்பி வைக்கிறான்.

பயணம் தொடர்கிறது. நியாங்கராவைத் தேடி அவன் தகப்பனும் பெரியப்பனும் மந்திரத் தூணோடு பியோல் நாட்டுக் கிராமத்துக்கு வருகின்றனர். நியாங்கரா ஏற்க னவே அங்கிருந்து விலகி தன் மாமனைத் தேடிப் போய் விட்டான். போகிற வழியில் ஒரு சுனையில் புனித நீராடி தன்னையும் தன் மனைவியையும் புனிதப்படுத் திக்கொள்கிறான். அங்கேயிருக்கும் ஒருவன் அவர்களை அவன் மாமனிடம் கொண்டு சேர்க்கிறான். மனைவி அப்போது கர்ப்பமாயிருக்கிறாள். மகன் பிறக்கப் போகி றான். மாமனுக்கு அவர்கள் வந்ததில் ரொம்பச் சந் தோஷம். மாமனுக்குக் கண் தெரியாது. குகையிலிருந்து கோரா இறகை எடுத்து வரச்செய்து மந்திரக்கண்ணை அதனிடத்தில் பொறுத்தச் சொல்கிறார். கோரா சிறகென்பது தட்டையான நீளமான மரச்சிறகு. உச்சியில் சிறகு போன்ற மரச்செதுக்குகள் இருக்கும். உன் தந் தையைத் தேடிச்சென்று பிரச் சினையை முடித்து வா என்கிறார் மாமன். மனைவி குறுக்கே ஓடி வருகிறாள். என் மகனுக்கு இந்த மேற்போர்வையைக் கொடு எனச் சொல்லிக் கொடுத்துவிட்டு மனை வியிடம் விடைபெற்றுப் போகிறான். மனைவி மறுபடி மாமனிடம் திரும் புகிறாள்.



மந்திரத் தூணைப் பிடித்துக் கொண்டு மகனைத் தேடி அலைந்த ஸோமாவும் தந்தையை எதிர் கொள்ள கோரா மந்திரச் சிறகுடன் வரும் நியாங்கராவும் ஒரு மணல் வெளியில் நேருக்கு நேர் சந்திக்கிறார்கள். மந்திரத்தூண் பறந்துபோய் மணலில் குத்திக்கொண்டு நிற்கிறது. நியாங்கரா கோரா சிறகை மணலில் ஊன்றுகிறான்.

இரண்டு எருதுகள் திமிர்கொண்டு ஒன்றையொன்று நோக்கி வருகிறது. மதங்கொண்ட யானையும் சினங் கொண்ட சிங்கமும் ஒன்றையொன்று வெறிக்கிறது. தந் தையை முதன்முதல் சந்திக்கும் மகன் கண்ணீர் விடுகிறான், பிற்பாடு நிதானித்துக் கொள்கிறான். தந்தையின் நோக்கம் மகனைக் கொல்வது, சமரசமேயில்லை. மகனின் நோக்கம் தந்தையின் தீய சக்தியை அதிகாரத்தை இல்லாதொழிப்பது. ஊன்றப்பட்ட மந்திரத்தூண் / கோரா சிறகின் ஸ்படிகக் கண்களில் கண்ணைக் கூசும்படி ஜீவலிக்கும் ஒளிதிரை முழுக்கப் பரவும்போது ஸோமாவும் நியாங்கராவும் அந்தச் சக்தியில் பிரிந்து போகிறார்கள்.

அலைஅலையாக மணல் குன்றுகளின் வளைவிலிருந்து நியாங்கராவின் மனைவி வருகிறாள். தூரத்தில் கோரா வின் சிறகுக்கு அருகில் கீழே மணலில் தோன்றி ஏதோ ஒரு பிரமாண்டமான பறவை வைத்த முட்டையை பிடித் துக்கொண்டு வருகிறான் குழந்தை. நியாங்கராவின் மனைவி அந்த முட்டையைத் திரும்ப வாங்கிக்கொண்டு போய் மணலில் புதைத்துவிட்டு மண்டியிட்டு கோரா சிறகை எடுத்துக்கொண்டு வருகிறாள்.

தனது கணவன் மகனுக்காகக் கொடுத்த மேற் போர்வையை குழந்தையின் தோளில் போட்டு கோரா சிறகை அவன் கைகளில் தருகிறாள். குழந்தை கோரா சிறகை தோளில் சாய்த்துக்கொண்டு மேற்போர்வையோடு மணலிலும் மேட்டிலும் நடந்து போகிறது.

## IV. மறுகட்டமைப்பு

இப்படங்கள், தமிழ்ப் பார்வையாளருக்கு இரண்டு வகையான செய்திகளைத் கொண்டிருக்கின்றன.

1. ஆபிரிக்க வரலாறு, வாழ்க்கை முறை, பண்பாடு சமூகப் பிரச்சினைகள், நெருக்கடிகள் போன்றன பற்றின அறிவை நாம் இதிலிருந்து பெறமுடியும்.


2. ஐரோப்பிய சினிமா வடிவங்களுக்கு மாற்றாக/ பொழுதுபோக்கு வியாபார சினிமாக்களுக்கு மாற்றாக / இந்திய தீவிர சினிமா அல்லது கலை சினிமா என் கிற தியான சினிமாவிற்கு (meditating cinema) மாற்றாக ஆபிரிக்கப் படங்களிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும் என்பது.

ஆபிரிக்க சினிமாவில் தீவிர சினிமா சார்ந்தவர்கள் பேசும் வாழ்வு சார்ந்த பிரச்சினைகள் என்ன? பின் காலனித்துவ அறிவுஜீவிகளின் மொக்கைத்தனம். ஆணாதிக் கக் குடும்ப அமைப்பு. பெண்களின் உடம்பையும் செயலை யும் கட்டுப்படுத்தும் மதம். பல்வேறு மனோவியல் ரீதியி லான பிரச்சினைகளை மதமதிப்பீடுகள் கொண்டு சிக்கலாக் கும் மௌலவித்தனம். நிலப்பிரபுத்வம். மேற்கத்திய நாடுக ளின் மீதான மோகம். அரசியல் பிரக்ஞையுள்ள கலைஞர்கள். சமூக உற்பவங்களுக்கு பெண்களைக் குற்றவாளிகளாக்கும் மாபு. வறுமை, வரட்சி, பஞ்சம். ஊழல் அரசியல்வாதிகள். வர்க்க சமரசம். அநாதைக் குழந்தைகளின் அவல வாழ்வு. எத்தனைமுறை ஒடுக்கப் பட்டாலும் தமது அடிப்படை உரி மைகளுக்காக எழுந்து போராடும் ஆன்ம பலம். தமது கடந்தகால அடிமைத் தனத்தை மறந்து விடா மல் எதிர்காலத்தை உக்ரமாக வாழவேண்டும் எனும் மன உறுதி. மாபெரும் கலாச்சாரமும் நாகரீக மும் தமது நதிப்படுகைகளில் இருந் தது, நாம் ஐரோப்பியர்களைப் பார்த்து தாழ்வு மனப் பான்மை கொள்ளவேண்டியது இல்லை எனும் பெருமிதம். ஐரோப்பியர்கள் ஆபிரிக்க சமூகங்களைப் பற்றி பரப்பி வைத்திருக்கும் அம்மணம், அழுக்கு, காட்டுமிராண்டித்தனம், மந்திரம், தந்திரம் போன்ற பிரமைகளை கட்டுக்கதைகளை உடைக்கும் எதிர்ப்புணர்வு. இதுவெல்லாம் ஆபிரிக்காவின் தீவிர சினிமாக்கள் செயல்படும் சமூகத்தனம். எப்போதும் தமது வாழ்வை மையமாக வைத்து மறுகட்டமைப்பு நோக்கில் உலகைப் பார்க்கும் புதிய பார்வை.

தமது சமூக முரண்பாடு பற்றி ஆழ்ந்த ஆய்வுகள் சினிமா சமூக மாற்றத்திற்கான சாதனம் (cinema as a weapon of the social change) எனும் கடப்பாடு. எந்த அடி மைத்தனத்தோடும் ஒடுக்குமுறையோடும் சமரசம் செய்யாத மனம். இதுவெல்லாம்தான் ஆபிரிக்க சினிமா. ஆபிரிக்க சினிமாக்களை நூற்றுக்கணக்கில் அடக்கி விடலாம். அதுவும் தீவிர சினிமாக்கள் 100க்கு மேல் போகாது. ஆனால் அது ஆபிரிக்கர்களின் சிந்தனையில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் மகத்தானது. ஆபிரிக்க தீவிர சினிமா உண்மையில் ஒரு விவாதக்களம். போராடுவதற்கான கிரியா ஊக்கி. ஆன்ம ஊற்று. ஆபிரிக்க சினிமா பற்றிய அறிமுகம் இந்திய தமிழகச் சூழலில் இல்லை. இந்தியாவிலிருக்கிற எந்த மொழி இயக்குநருக்கும் ஆபிரிக்கச் சினிமாக் கலைஞர்களோ சினிமாக்களோ பாதிப்பைத் தரவில்லை. இன்னும் சத்தியஜித்ரேயைத் தாண்டிச் சிந்திக்கும் மனம் இல்லை. காரணம் இதுதான் முழுத் தொலைக்காட்சிச் செய்தி. விசயங்களும் அதிகார வர்க்க/ஜாதிகளின் கையில். ஆபிரிக்க மக்களுக்கு இணையான பிரச்சினைகளும்

அனுபவங்களும் நிறவெறி ஒதுக்கலும் தீண்டாமையும் கொத்தடிமை அனுபவத்திற்கும் கீழ் வாழ்பவர்கள் இந்தியாவில் தலித் மக்கள். இந்த தலித் மக்களைப் பற்றின பரிதாப உணர்வு போன்றதுதான் ஆபிரிக்க மக்கள் / கலைஞர்களின் பாலான இந்திய அறிவாளிகள் சினிமாக்காரர்களின் உணர்வும்.

ஆப்பிரிக்கக் கலைஞர்கள் தமக்குள் ஒன்றுபடுவதற்கு மிகப்பெரிய போராட்டங்களையும் அவமானங்களையும் தாண்டி வந்திருக்கிறார்கள். இன்று ஆபிரிக்க சினிமா ஐரோப்பிய சினிமாவின் மரபார்ந்த வடிவங்களை உடைக்கிறது. தனக்கென்று லயங்களையும் (rhythm) வடிவங்களையும் (forms) கண்டுபிடித்திருக்கிறது. உலக சினிமாவின் தவிர்க்கவியலாத சிருஷ்டிகளை ஆபிரிக்க இயக்குனர்கள் இன்று தந்துகொண்டிருக்கிறார்கள். ஆபிரிக்க மையவாதம் பல புதிய பிரதேசங்களை ஆப்பிரிக்க மக்கள் பெருமிதப்படத் திறந்து விட்டிருக்கிறது.



ஆரம்பம் முடிவு டெம்போ கிளைமாக்ஸ் மியூசிகல் உரையாடல்கள் போன்ற ஹாலிவுட் சினிமா வடிவங்களை பெரும்பாலான ஆப்பிரிக்கப் படங்கள் கவனங்கொள்வ தில்லை. மியூனோ மியூட்டோ படத்தின் வசனங்கள் காட்சிகளை விரல்விட்டு எண்ணி விடலாம். காட்சிகள் மாறிமாறி வெட்டிக்கொண்டு வருகின்றன. கடலின் லயமும் தார்ப்பாதை வாகனங்களின் லயமும் விறகு வெட்டும் கோடாலியின் லயமும் புணரும்போது பின்னுகின்ற கால் களும் ஒரே தளத்தில் இயங்குகின்றன. Touki Bouki படத்தின் ஒரே சட்டங்தான். அதிர்ச்சி. காதலியிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே அவரசமாக கக்கூசுக்குப் போகும் நாயகன் அதன் மையம். Night of the Counting Years படம் திகில் பரவசம் துயரம் தத்துவம் கையறுநிலை போன்றவற்றை ஒன்றிலொன்று கரைந்துபோகச் செய்கிறவை. Man of the Ashes மாதிரி வெளிப்படையாகப் பேசிய படங்கள் நம் சூழலில் குறைவு. Alexandra again and Always என்ன அற்புதமான படம். அரசியல் பிரக்ஞையும் மானுட நாடகமும் இணைந்த இம்மாதிரிப் படத்தை நம் சூழலில் கற்பனை கூடச் செய்து பார்க்க இயலாது. யாபா, வென்ட்குனி போன்ற படங்கள் குழந்தைகள் காவியங்கள். இக்குழந் தைகள் புதையல் தேடப்போன சாகசக் குழந்தைகள் அல்ல. ஏழைக் குழந்தைகள். அநாதைக் குழந்தைகள். கிராமத்து மனிதர்களும், அன்பும், நதிகளும் மட்டுமே தெரிந்த குழந்தைகள். தமிழ் சினிமாக் குழந்தைகள் பணக்காரக் குழந்தைகள் தத்துவம் பேசும் குழந்தைகள். அழகாக ஆடையுடுத்திய குழந்தைகள். கடவுளிடம் பேசும் குழந்தைகள். Yeelen படம் சொல்லும் சேதிகள்தான் எத்தனை எத்தனை. இதை அதிகாரத்திற்குப் பொருத்துங்கள். அண்டங்களை கட்டியாழும் விஞ்ஞா னிகளின் மமதைக்குப் பொருத்துங்கள். அழிப்பதன் மூலமே தமது அதிகாரத்தை நிலைநாட்டும் இன்னொரு தலைமுறைக்கு பொருத்திப் பாருங்கள். ஆரம்பத்தில் வெம்மை இருந்தது. வெம்மைதான் ஒளி. ஒளி என்பது நெருப்பு. பூமியும் ஆகாயமும் அர்த்தமாவது ஒளியினால். ஒளியே அபரிதமானால் அழிவுதான். ஆஹா! எத்தனை விதமான வாழ்க்கை. எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வார்த்தையில் சொன்னால் ஆபிரிக்கப் படங்கள் விளிம்புநிலை மனிதர்களின் (marginal) சிருஷ்டிகள். அவர்களின் ஒடுக்கப்பட்ட பார்வையிலிருந்து உலகைப் புரட்டிப் பார்த்த படங்கள்.

நான் இங்கே அறிமுகப்படுத்தியிருக்கும் எல்லாப் படங்களும் தீவிர சினிமா சார்ந்தவர்களின் படங்கள். எகிப்து இயக்குனர் யூசுப் செயின், மாலி இயக்குனர் சுலைமான் ஸிஸ்ஸே, பர்கின பாஸே இயக்குனர் ஓட்ரிஸா போன்றவர்கள் ஆப்பிரிக்கா சினிமாவின் மாபெரும் ஆளுமைகள். நிறையப் படங்களைக் கொடுத்தவர்கள். மிக விரிவாக அறிமுகப்படுத்தத்தக்க சாதனைகள் செய்து கொண் டிருப்பவர்கள். இந்தப் பிரக்ஞையுள்ள இயக்குனர்கள் ஒஸ்மான் செம்பேன், ஹைய்லே ஜெரிமா, ஓட்ரிஸா, ஸெயின், ஸிஸே போன்றவர்கள் தம் மக்களைப் பற்றிக் கட்டப்பட்ட ஐரோப்பிய பிரமைகளை உடைத்தெறிகிறார்கள். லெவிஸ்ட்ராஸ் சொல்கிறபடி ஆப்பிரிக்க சமூகங்களை ஐரோப்பியர் ஆய்ந்தால் அது மானுடவியல் (Anthropology). ஆப்பிரிக்கர்களே ஆய்ந் தால் அது வரலாறு. இந்த இயக்குனர்கள் வரலாற்றாளர்கள் மட்டுமல்ல; வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்பவர்கள்.

நான் குறிப்பிட்ட எல்லா இயக்குனர்களுக்கும் உள்ள பொதுவான அம்சம் இவர்கள் எல்லோருமே மார்க்சிய சிந்தனையாளர்கள் என்பதுதான். செம்பேன், ஓட்ரிசா, ஸிஸே போன்றவர்கள் ரஷ்யாவில் திரைப்படக் கல்வி கற்றவர்கள் என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். இவர்கள்தான் ஐஸன்ஸ்டீனின் சமகால வாரிசுகள். 'அக்டோபர்' ஆதரிஸம் பெற்றவர்கள். வானம் வழிவிட்டு விலகிச் செல்க! பூமி மறுபடி புரண்டபடி பொலிவு பெறுக! ஆபிரிக்க மைந்தர்களே அருமைச் சகோதரர்களே எமக்கிடையே வருகை தாருங்கள்! வாசல் திறந்திருக்கிறோம்... ●

## விவரங்கள் விமர்சனங்களுக்கான புத்தகங்கள் ஆதாரங்கள்:


I THE ART AND IMAGINATION OF AFFRICAN CINEMA:
PROGRAMME NOTES / NFT / LONDON - AUG/SEPT 95

1. YEARS OF THE BRAZIER
2. SHAIHU UMAR
3. THE NIGHT OF THE COUNTING YEARS
4. THE GIFT OF GOD
5. YAABA
6. MUNOMUTO
7. MAN OF THE ASHES
8. TOUKI BOUKI
9. ALEXANDRIA AGAIN AND ALWAYS

II MOVING PICTURES
PRESENTED BY ALEX COX
YEELEN / BBC2 /1992

III MONTHLY FILM BULLETIN
NFI 1 AUGUST 95

IV AFRICAN CONVERSATION
SIGHT AND SOUND MAGAZINE
SEPTEMBER / 1995 / LONDON / BFI




*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8471 5636*

## நூல் விமர்சனம்

# THE TRUE COST OF CONFLICT

சேபர்வேல்ட் (Saferworld) நிறுவனத்தின் பெருவிருப்பான மோதல்கள் தம்மிடையே கொண்டுள்ள செலவீனத்தையும் நன்மைகளையும் மதிப்பீடு செய்யும் திட்டத்தின் அறிக்கையாக இந்நூல் விளங்குகின்றது. பொருளாதார ரீதியாக மோதல்கள் பெரு நட்டமானவை என்று காட்டுவதற்கு 7 மோதல்கள் உற்றுநோக்கப்பட்டுள்ளன. வளைகுடா யுத்தம், கிழக்கு திமோர் மீதான இந்தோனேசியப் படையெடுப்பு, மொசாம்பிக்கிலும், சுடானிலுமான உள்நாட்டுப் போர், பேருவின் கெரில்லா யுத்தம், காஷ்மீர் விடுதலைப் போர், முன்னைய யூகோஸ்லேவிய யுத்தம் ஆகிய எல்லாவற்றிலும் குறுகியகால நன்மைகளுடன் ஒப்பிடும்போது நீண்டகாலத் தாக்கங்கள் பாரிய பாதிப்புகளை ஏற்படுத் தியமை கண்கூடு. பலியான உயிர்கள், பொருளாதாரம், சூழல் என்பன மீள முடியாப் பாதிப்புகளாகும். மோதல் இடம்பெற்ற நாட்டுடன் சேர்ந்து அவற்றுடன் வியாபாரத் தொடர்புகளைக் கொண்ட நாடுகளும் பாதிக்கப்பட்டன. மேற்கத்தைய கைத்தொழில் நாடுகளும் தமது சந்தைகளையும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களையும் இழந்துள்ளன. முடிவில் சர்வதேசியம் எவ்வாறு மோதல்களைத் தவிர்க்கலாம், தீர்க்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்பதற்கான சில யோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.




மோதல்களின் இழப்புகள் விஸ்தாரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எனவே மாற்றங்களுக்கும், மோதல்களுக்குமான சமூக அமைப்புக் கட்டுமானங்கள் பகுத்தாயப் படவில்லை. வரலாற்றுப் பின்னணியிலிருந்து மோதல்கள் தனிமைப்படுத்தப்பட்டு நோக்கப்பட்டுள்ளதால் வெறும் பொருளாதாரக் கண்ணோட்டமாகவே நூல் அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக மொசாம்பிக்கில் எதிர்பாராத விளைவாக அமைந்துள்ள போரை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம், மக்களுக்கும் அரசுக்குமிடையேயான மாறுபட்ட உறவு என்பன கவனத்திற்கு எடுக்கப் படவில்லை. நூலில் பெரும் குறைபாடாக அமைவது 'மேற்கொண்டு செய்ய வேண்டியவை' என்ற பகுதியாகும். தேசிய அரசியல் என்ற அடிப்படையை ஏற்றுக்கொள்வதால் பரிசீலிக்கப்படவேண்டிய விடயம் முன்கூட்டியே கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் உலக வங்கியும் IMF உம் மனித உரிமைகளை அரசுகள் முன்னெடுக்கும் வகையில் அழுத்தங்களை மேற்கொள்ளலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் உலக வங்கி, IMF என்பன வகிக்கும் பொருளாதார வழிமுறைகள்தான் மனித உரிமை மீறலுக்கு வித்தாகின்றன என்பது பட்டும் படாமலும் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் மோதல்களின் நன்மைதீமைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து இதையிட்டு உடனடி நடவடிக்கையில் சர்வதேசியத்தை இறங்கவைக்க உசார்ப் படுத்துகின்றதென்ற வகையில் இந்நூல் பயனுள்ளது.

நூல் விமர்சனம் செய்தவர் :
மாக் சிங்கொனொ
*MARK CHINGONO, RESEARCH OFFICER,*
*REFUGEE STUDIES PROGRAMME.*

## ஒளி நாடா விமர்சனம்

# THE ISABELLAS; THE LONG MARCH

அவுஸ்திரேலியாவின் வடகரைக்குத் தஞ்சம் கோரி (இசபெல்ல என அங்குள்ள அதிகாரிகளால் அழைக்கப் பட்ட) சிறிய படகொன்றில் சென்ற 56 சீன அகதிகள் பற்றியது இவ்வொளி நாடா. Chan Xing Liang என்ற சீன சனநாயகவாதி இவ் அகதிகள் குழுவின் தலைவர், அவரது சரிதை கூறுவதாக ஒளிநாடா அமைந்துள்ளது. கரைசேர்ந்து அனுமதியின்றி நாட்டில் நுழைந்ததற்காக இவர் தடை முகாமில் தள்ளப்பட்டார். இதை எதிர்த்து அவரும் இன்னும் சிலரும் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது பாதுகாப்பிற்குப் பங்கம் எனக் கணிக்கப்பட்டுச் சாதாரண சிறையில் அடைக்கப்பட்டனர். வருடங்கள் சில சென்றபின் அகதிகளாக ஏற்கப்பட்டு சிறையிலிருந்து விடுதலையாயினர். லியாங்கின் வார்த்தைகள் புலமையுடன் தெம்பூட்டுவனவாக நாடாவில் வெளிவருகின்றன. எனினும் முடிவில் பல விடயங்கள் புறக்கணிக்கப்பட்டமை புலப்படுகின்றது. நாடாவின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து நிற்பது அவர்களது ஆபத்து நிறைந்த கடற்பயணமும் அவுஸ்திரேலியப் பாலைவனத்தில் கழித்த நாட்களுமாகும். நாடக பாணி மேலோங்கி நின்றதால் மையக்கருத்துச் சிறு விடயமாகி விட்டது.

சீனாவின் தினசரி மனித உரிமை மீறல்கள்தான் முக்கிய கருத்து. அரசின் நடவடிக்கைகளையிட்டு ஒரு சிறிது எதிர்ப்பானாலும் அது ஈவிரக்கமின்றி நசுக்கப்படும். உயிரைக் கையில் பிடித்து சிறு வள்ளத்திலேனும் பெருந்தொகையானோர் தப்புவதற்கு இதுவே மூலகாரணமாகும். இவ்வாறாகத் தப்பியோடுவோரை சமூகக் கொடுப்பனவுகளுக்காக வந்து சேரும் போலி அகதிகள் எனக் கருதும் அவுஸ்திரேலியர் உட்பட்ட அநேகர் அதற்கான மூலகாரணத்தை நோக்கத் தவறுகின்றனர். ஒரு சிறிது பணத்தை நாடுவோர் அகதிகள் தப்பியோடும் ஊக்கத்தைத் தம் வசம் கொண்டிருக்க மாட்டார். அவுஸ்திரேலியாவிற்குள் முன் அனுமதியின்றி நுழையும் எவரும் தடுத்து வைக்கப்படுவர். (நாட்டைவிட்டுத் தப்பியோடும் நபர் கடவுச்சீட்டு, விசா என்று பெற முடியாது என்பது கவனிக்கப்பட வேண்டும்). இவ்வாறான தடுத்து வைத்தல் கட்டாயமானதுடன் அகதியெனக் கணிக்கும்வரை எதுவித மீள் பரீட்சைக்கும் இடம் கிடையாது. இந்நடைமுறை சர்வதேச வழக்கிற்கும் குறிப்பாக அகதி ஒப்பந்த மரபின் 31ஆவது சரத்திற்கும் முரணானதாகும். இறுதியில் நாம் பதித்துக்கொள்ள வேண்டியது அகதி அந்தஸ்தை எட்டிய திரு.லியாங்கும் அவரது சகாக்களும் இவ்வாய்ப்பினைப் பெற்ற ஒரு சிலர் என்பதாகும். யப்பான் சென்றடையும் சீனர் அகதி விண்ணப்பம் செய்வதற்குக்கூட இடமளிக்கப்படாமல் கட்டாயமாக தடுத்துவைக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்படுகின்றனர். கவனத்திற்கு எடுக்கப்பட்டுத் தீர்வுகாணப்படவேண்டிய விடயங்கள் இவைதான் என நினைவிற் கொள்ள வேண்டும்.

விமர்சகர்: *SOUL TAKAASLIN,*
*VISITING STUDY FELLOW,*
*REFUGEE STUDIES PROGRAMME.*

# அஞ்சலி





பாரிஸ் நகரில் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட
திரு. க. கஜேந்திரன்
திரு. க. பேரின்பநாதன்
ஆகியோருக்கு மீட்சியின் அஞ்சலி.

இக் கோரச் சம்பவத்தைக் கண்டனம் செய்யும்படி
உலக மக்களை மீட்சி கோருகிறது.

கொலைசெய்யப்பட்டோரின்
குடும்பத்தார்க்கும், நண்பர்களுக்கும், தோழர்களுக்கும்
மீட்சியின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

மீட்சி:
பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், பல்துறை அறிஞர்கள் , சமூகத் தொண்டர்களை உள்ளடக்கிய
ஒரு சுயேட்சைக் குழுவின் படைப்பு
வெளியீட்டாளர்:
TAMIL INFORMATION CENTRE, THAMIL HOUSE, 720 ROMFORD ROAD, LONDON E12 6BT TEL: 081-514 6390
சந்தா (12 இதழ்கள்): U.K.: £7.00 வெளிநாடுகள்: £12.00